கழக வெளியீடு 1.

# கடற்கரையின் எதிரொலி

அல்லது

# தமிழ்நாடு தமிழருக்கே

# The Echo of the Beach

or

# Tamil Nad for Tamils

இவ்வெளியீட்டின் ஊதியத்தைக்கொண்டு, பெரியாரின் 60-ம் ஆண்டு நிறைவு விழாவின்போது 'பெரியார் நினைவுமலர்' ஒன்று சீரிய முறையில் வெளியிடப்பெறும்



From the Profits of this issue, Periyar's Commemoration Volume on the completion of his 60th year is to be published.

வெளியிடுவோர் :

**தென் இந்திய இளைஞர் நலஉரிமைக் கழகம்**

**ஐயம்பேட்டை**

ட்றேவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

T21220

R004F03

விலை] **1938** [அணா 2

# தமிழர்க்கே உழைக்கும் தாள்கள்

| தாள். | முகவரி | ஆண்டுவரி. ரூ. |
|---|---|---|
| விடுதலை ... | மேற்பார்வையாளர் (மானேசர்) விடுதலை ... | 7½ |
| குடியரசு ... | ,, குடியரசு ... | 3 |
| பகுத்தறிவு ... | ,, பகுத்தறிவு ... | 1 |
| | குறிப்பு:— குடியரசும் பகுத்தறிவும் சேர்ந்து | 3½ |
| நகராதூதன் ... | ஆசிரியர், நகராதூதன் சிவாசிப்பதிப்பகம், உறையூர், திருச்சி ... | 3 |
| அறிவுக்கடல் அல்லது ஞானசாகரம் ... | ஆசிரியர், மறைமலையடிகள், பல்லாவரம் ... | 4 |
| தமிழ்ப்பொழில் ... | ஆசிரியர், "தமிழ்ப்பொழில்" கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை ... | 3 |
| செந்தமிழ்ச்செல்வி | ஆசிரியர், "செந்தமிழ்ச்செல்வி" 6, பவளக்காரத்தெரு, சென்னை ... | 2½ |
| 'ஜஸ்டிஸ்' ... | ஆசிரியர், "ஜஸ்டிஸ்" சேதட்ரால் P. O., சென்னை ... | 4 |
| சண்டே அப்சர்வர் | ஆசிரியர், "சண்டே அப்சர்வர்" 15, ஜெனரல் பேட்டர்சுரோடு சென்னை ... | 4 |
| தமிழரசு ... | ஆசிரியர், "தமிழரசு", 31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை ... | 1 |
| திருவிளக்கு ... | மேற்பார்வையாளர், 11/350, தங்கசாலைத்தெரு, சென்னை ... | 2 |

# "கடற்கரையின் எதிரொலி"

— அல்லது —

# தமிழ்நாடு தமிழருக்கே.

"புகைந்துகொண்டிருந்த எரிமலை இன்று வெடிக்கத் தொடங்கியிருக்கிறது; நீர்தான் தோன்றுமோ; நிலந்தான் வெடிக்குமோ; அடங்கியிருந்த பெருங்கடலும் கொந்தளிக்கின்றது; இவை மாள்வதற்கோ அன்றி மீள்வதற்கோ! என்று தமிழ்மக்களெல்லோரும் இனி என்ன நடக்குமோ என உறுதிகூற முடியாமல் இன்று எட்டுத்திசையையும் நோக்கி நிற்கின்றனர். அவர்கள் உள்ளத்தில் எண்ணிலடங்காத எண்ணங்கள் தோன்றி மறைகின்றன. ஏன் நிற்கவேண்டும்? ஏன் எண்ணவேண்டும்? இதற்குக் காரணம் இன்று நேற்றல்ல—பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தோன்றிவிட்டது.

இந்நாட்டுத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உலகிற் சிறந்த நாகரிகம் வாய்ந்திருந்தனர்; அவர்கள் பரந்த அறிவினர்; நிறைந்த ஆண்மையர்; களங்கமில்லாத நெஞ்சத்தினர்; முன்பின்னறியாத விருந்தினர் தம்மைநோக்கி வரின், இனிமையாக வரவேற்பர்; இயன்றனவெல்லாம் கொடுத்திடுவர் அதனால் அவர் முகம் மலர்ந்ததா என்று எதிர்நோக்குவர்; இனிமையாகப் பேசுவர்; அவர் எழுந்துபோனால், தாமும் அவர் பின் எழுடி நடந்துசென்று வழிகூட்டுவர்; விருந்தினர் களிப்போடு செல்லுதலைத் தாம் பின்னால் நின்று மகிழ்ந்துநோக்குவர்; தமக்குள் மட்டிலடங்காத பெருமிதம் அடைவார். இவர்களிடத்தில் பசியால் மெலிந்து நல்லுணவும், நல்ல இருக்கையும் இல்லாமல் காடுமேடெல்லாம் அலைந்து திரிந்து, ஒருவன் வாடி வருவானானால் அவனுடைய நிலை எவ்வாறிருக்கும்? முடவனுக்குக் கொம்புத்தேனும், வறியனுக்குப் பொற்குவியலும் கிடைத்தால் அவர்களுடைய உள்ளக்களிப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

அவ்வாறே ஒருவரல்ல; இருவரல்ல—வடதிசையினின்றும் வந்ததொரு கூட்டம். பார்த்தனர் இந்நாட்டினை; எங்கு நோக்கினும் நீர்வளம்; எத்திசையில் சென்றாலும் அத்திசையெல்

லாம் பசும் பயிர்; எவ்விடத்திலும் இனிய வரவேற்பு; கண் கொள்ளாத காட்சி; கரைகாணு இன்பம்; தமிழ்மக்கள் உண்ண உணவுகொடுத்தனர்; இருக்க இடந்தந்தனர்; அவர்களுக்கு ஆடையுங்கொடுத்து மானங்காத்தனர்; வடநாட்டுக் கூட்டம் இவர்களோடு கலந்தது-உண்டு மகிழ்ந்தது-உறவாடவுந் தொடங்கியது. நாளடைவில் இக்கூட்டம்—பனியினும் மழையினும் நனைந்து வருந்திய கூட்டம்—ஆரியக் கூட்டம்—எவ்வகை இடையூறுமின்றி இன்ப வாழ்வைப் பெற்றதென்றால், அடுத்தவரைக் காத்து அவரோடு இரண்டறக்கலந்து எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்று கூடிக்குலாவும் தமிழரோடு கலந்ததென்றால் அக்கூட்டம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி மகிழ்வதும், எண்ணியவாறு செய்யத் தொடங்குவதும் இயல்பேயன்றோ! நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது வாலைக் குழைத்து வள்ளென்று குரைப்பது வழக்கமல்லவோ!

அக்கூட்டத்தினர் தமிழர்கள் செல்வத்தைத் தாங்களே அடையக் கருதினர். என்று அங்ஙனம் கருதினார்களோ அன்று தான் இன்றைய புரட்சியின் வித்து ஊன்றப்பட்டது. ஓங்கி மலிந்த கலைச்செல்வத்தையும், ஒப்புயர்வற்ற இனிமைத் தமிழையும், செழித்து வளர்ந்த பொருட்செல்வத்தையும், சிறிது சிறிதாகக் கவர்வாராயினர். பொருட்செல்வத்தையும், பிறவற்றையும் அரசர்களோடும், செல்வர்களோடும் உறவாடிப் பெற்றனர். தாங்கள் பேசிய மொழி இறந்துபட்டமையாலும், அதனிலும் இனிமைவாய்ந் திருந்தமையாலும் பிறகு, தமிழ்மொழிமேல் அவர்களுடைய நோக்கம் செல்வதாயிற்று. இவ்வாறு கரவாடத் தொடங்கிய அக்கூட்டத்தைத் தமிழர்கள் இருபதாம் நூற்றாண்டுவரை எவ்வித மனக்காழ்ப்பும், மாறுபாடும் கொள்ளாமல் போற்றிவளர்த்தனர்; எல்லாம் உதவினர்; ஆனால் அவர்களுடைய சூழ்ச்சியை உணர்ந்தனரில்லை. உணர்ந்த ஒரு சிலர் வெளிப்படையாக உரைக்கவும் அஞ்சினர்.

காலப்போக்கில் ஆங்கில ஆட்சி வேரூன்றியது. வேதங்களும், ஸ்மிருதிகளும், சாஸ்திரங்களும், இதிகாசங்களும், புராணங்களும், மனுதர்மங்களும் பிறவுமுள்ள வடமொழி நூல்களெல்லாம் ஆங்கிலத்திலும், ஏனைய மொழிகளிலும் ஒளிமறைவின்றி மொழிபெயர்க்கப்பட்டன. இந்நூல்களையெல்லாம் தமிழர்கள் பலரும் படிக்கக்கூடாதென்றும், அவர்களனைவரும்

'சூத்திரர்' என்றும், படித்தால் நாக்கையறு, மூக்கையறு என்றும், பலவாறு எழுதிவைத்த அவர்களது கொடுமொழிகளும், அவர்தம் நாகரிகமும் பெருந்தன்மையும் இல்லாத இழிந்த பிழைப்பும், நயவஞ்சகம் உடைமையும், நல்லொழுக்கமில்லாமையும், நாடோடி வாழ்க்கையும் முதலான எல்லாத் தன்மைகளும் வரிசையாக அரசுவீற்றிருந்த நாடகமேடையிலே சூழ்ச்சித் திரையானது வெட்டவெளிச்சத்தில் தூக்கி எறியப் பட்டது. உடனே தமிழரிடையே காணாத காட்சிகளும், உள்ளத்தில் தோன்றாத நினைவுகளும் ஒன்றன்பின்னொன்றாக ஊடுருவிப்பாய்ந்தன. கோழைத்தனமெல்லாம் தலைகீழாயது—மனப்புரட்சியும் ஒளிவீசிற்று. ஆரியச் சூழ்ச்சியால் உண்டான இருளெல்லாம் பளிச்செனப் பறந்தன. இறுதியாக வஞ்சனை வெளிப்பட்டது. இங்ஙிலையினும் இவற்றையுணராமல் எண்ணிறந்த தமிழர்கள் அவ்வாரியப் பேய்களோடு உறவாடி, அவருடைய பழக்கங்களெல்லாம் படியப்பெற்றனர். தம்மோடு உடன்பிறந்த தமிழ்மக்களை அவர்கையிற் காட்டிக்கொடுத்தனர். அவர் காலை நக்குதல் செய்தனர். அச்சூழ்ச்சியின் அடிவேர் எத்துணை வலிமையுடையது என்பதைச் சிறிது எண்ணிப் பார்க்கவேண்டும். காட்டிக்கொடுப்போர் வலிமையே இன்று ஆரியர்கள் வலிமையாக இருக்கிறதன்றி வேறு வலிமை அவர்கட்குச் சிறிதுமில்லை. பல்லாயிரம் ஆண்டுகளாகச் சூழ்ந்து செய்யப்பட்ட கொடுமைகளைச் சில ஆண்டுகளுள் அனைவரும் அறிந்துணர்தல் இயலாததொன்றே.

நிற்க, தங்கள் ஒழுங்கீனமெல்லாம் அம்பலத்திற்கு வந்தமைகண்ட ஆரியர் வயிறெரிந்தனர்; தமிழர்மேல் சீறிவிழுந்தனர்; விழுந்தென்ன செய்வது? அவர்களால் உண்டாக்கப்பட்ட சூழ்ச்சிகளே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயின. "தோன்றிய பொருள் அழியும்—அது தோன்றிய இடத்திலேயே ஒடுங்கும்—அதற்கு அதுவே காரணம்" என்று அவர்களுடைய நூல்களும் கூறுகின்றன; அக்கூற்றை அவர் அறிந்திலர். எதிர்த்து நின்றாலும் நேர்முறையில் நின்றால் தமிழர் பின்வாங்கமாட்டார். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அவர்கள் சூழ்ச்சித்திரையில்தான் விளையாடுகின்றனர். ஆனால் முக்காலமும் உணர்ந்த பேரறிஞர்போலப் பிதற்றுகின்றனர். என்னதான் செய்யினும் முடைநாற்றம் நின்றபாடில்லை. ஒரு முறையல்ல—பலமுறையும், ஒருவர் இருவரல்ல—அனைவருமாகப் பட்டப்பகலிலேயே ஆரியரைக்கொண்டே ஆரிய சூழ்ச்

சியை அறிந்த பின்னரும் தமிழர் ஏமாறமாட்டார்கள். ஏன்? தாயைத் தண்ணீர்க்கரையில் பார்த்தவன் மகளைத் தேடித்திரிய வேண்டுவதில்லையன்றோ!

ஆங்கில ஆட்சியில் ஓரளவு எழுத்துரிமை கிடைத்தது; பேச்சுரிமை பெருகிற்று—அதனால் ஆரியர் ஒழுங்கினமெல்லாம் அரங்கேற்றப்படுதல் பொறுதவராகி நெஞ்சம்புழுங்கினர். நாட்டுணர்ச்சி வேண்டுமெனவும், விடுதலை வேட்கை என்று தணியுமெனவும், எல்லோரும் ஓர்குலமெனவும், தூக்குமேடைக்கும் முன்வருவேன் எனவும் மேடைகளிலெல்லாம் அவர்கள் இன்று கூவக்கூடிய அளவுக்கு அறிவு புகட்டி உணர்ச்சி ஊட்டிய ஆங்கில மொழியை, அது அடிமை மனப்பான்மை தருகிற தென்று கூறி அதனை ஒழித்துவிடுவோம் என்றனர். தாங்கள் ஆடு மாடு மேய்த்து ஓட்டாண்டிகளாய் இங்கு வந்த அன்று முதல் இன்றுவரை செய்த சூழ்ச்சியின் பயனால், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பல மொழிகளாகத் தமிழைச் சிதைத்திருப்பினும், இத் தென்னாட்டில் மாத்திரம் அத்துணையளவு செய்யமுடியாது வஞ்சனையெல்லாம் வேரறுக்கப்பட்டமையின், அதனை எவ்வாறாயினும் அழித்துவிட வேண்டுமென்ற எண்ணங் கொண்டும், ஆரியராட்சியை இந்நாடு முழுவதும் நாட்டிக்கொள்ளுதற்கும் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்குவோம் என்று முனைந்துவிட்டனர். ஆனால் வெளியில் இந்தியினால் அடிமை நீங்கும்; ஒற்றுமை ஓங்கும்; தமிழ் வளரும்; தமிழுக்கு இந்தி அடியாள்போலப் பெரும்பணி செய்யும்; நம்புங்கள்; இந்தியைக் கட்டாயம் படியுங்கள் என்று கூறி ஒரு மாநிலத் (மாகாணத்) தினும் இல்லாத ஒரு திட்டத்தைக் கொணர்ந்துவிட்டனர். ஆ! என்ன கொடுமை!

இங்ஙனம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் தனக்கொரு கண் கெடினும் அடுத்தவனுக்கு இருகண்ணும் கெட வேண்டும் என்ற கொள்கையில் ஆரியக்கும்பல் அவ்வளவும், அவரிடத்தில் மயங்கிய கூலிகளும் ஒன்றுகூடி, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பதை அறிஞர்கள் எடுத்துக்காட்டியதும் அவர்களையெல்லாம் ஒருவன் காட்டிக்கொடுப்போர் என்கிறான்; மற்றொருவன் கூலியென்றும் காலியென்றும் கூறுகிறான். இன்னொருவன் பிற்போக்காளர் என்கிறான். வேறொருவன் தன்னலக்காரர் முணுமுணுப்பு என்கிறான்-அம்மட்டோ! பெருமை தங்கிய முதலமைச்சர்முதல் முடிச்சவிழ்க்கும் காலிகள்வரையில் உள்ள அக்கூட்டத்தினர் எல்லோரும் தமிழ்ப் பெருமக்க

ளைக் குரங்குகள் என்றும் 'அறிவிலிகள் என்றும்' தமிழறிஞர்களை 'உலகியலறிவில்லாதவர்கள்' என்றும் நாத்தடிப்புடன் கூறத்தொடங்கியதோடு—ஒருமொழியால் மற்ருெரு மொழி கெட்டுவிடாது—இந்தியால் தமிழ் வளரும்—பிறமொழிக் கலப்பால் ஒருமொழி வளரும்—ஆங்கிலத்தைப் பார்! மேனுட்டைப் பார்! என்று ஆரியரும் ஆரியரைச்சார்ந்த அனைவரும் கூறத் தொடங்கிவிட்டனர்.

இங்நிலையில் அண்டிக்கெடுக்கும் ஆரியருக்கு எதிர்காலம் விடைசொல்லும்; அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவரொடு சேர்ந்த தமிழரைப் பிரித்தால் அவர்கள் வலிமை தானே அழிந்திடும். ஆதலினுல் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சூழ்ச்சியின் சிறிய விதை, முளையிலே கிள்ளுவாரின்றி இன்று பெரிய ஆலமரமாகி ஆலமரத்துப் பேயுமாகித் தலைவிரித்தாடுவதை அவர்கள் உணருமாறு செய்தல்வேண்டும். ஆகவே, மொழிக்கலப்புப்பற்றிய அவருடைய மாறுபட்ட கருத்துக்களால் 'தமிழ்க்கொலை' நிகழ்வதும், அவற்றை நீக்குவதால், 'தமிழ்நாடு தமிழனுக்கே' என்ற புத்துணர்ச்சி பிறப்பதும் போன்ற நன்மை தீமைகளை விளக்கி—அவர் கூற்றை வெட்டிப் பேசும்பொருட்டே இக் கட்டுரையை வெளியிடலானேம்.

## பிறமோழிக் கலப்பின் காரணங்கள்.

1. ஒரு மொழியில் பிறமொழிச் சொற்கள் கலக்கவேண்டுமானுல் அல்லது ஒரு மொழியால் ஒரு மொழி சிதையவேண்டுமானுல் அம்மொழி வழங்குகின்ற நாட்டு மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வற்கடத்தினுலோ (பஞ்சம்) பிறவற்ருலோ வேறுவேறு இடங்களுக்குச் சென்றுவிடுதல் வேண்டும்.

2. நாட்டில் அமைதியின்றி அடிக்கடி பிறநாட்டோடு போருண்டாதலும், வேற்று நாட்டினுடைய அடக்குமுறை ஆட்சியும் நிகழுதல் வேண்டும்.

3. பிறநாட்டோடு நெருங்கிய தொடர்பும், வாணிபமும் வளருதல் வேண்டும்.

4. பிறநாட்டில் புதியனவாய்த் தோன்றிய பொருள்களுக்கும் கருத்துகளுக்கும் ஏற்ற நாட்டுமொழிச் சொற்கள் ஏற்படாதிருத்தல் வேண்டும்.

5. இருவகைப்பட்ட வேறு வேறு கூட்டத்தினர் சேர்ந்து உறைதல் வேண்டும்.

6. உடனுறைகின்ற மக்கள் பிறநாட்டினரா யிருந்தால் அவர்களுடைய சூழ்ச்சியினுல், தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தற்கு வேண்டுமென்றே பிறசொற்களைக் கொண்டுவந்து புகுத்தல் வேண்டும்.

**இவற்ருல் எவ்வாறு கேடும்?** நாட்டின் வறுமை அல்லது வேறு யாதேனும் காரணமாக அந்நாட்டு மக்கள் சிதறிப் பல பிரிவாகப் பிரிந்து தங்களுக்கு உதவி கிடைக்கும் இடங்களைத் தேடிப் பிறநாட்டிற்குச்சென்றுவிடுவார்களானுல் அவர்களுடைய தாய்நாட்டு மொழியின் வலிமை குறைந்து பிறநாட்டினர் செல்வாக்கு பெருகிவிடும். அதனுல் அவர்களுடைய மொழியின் பல பகுதிகள் சிதைந்து குறைந்துவிடும். நடு ஆசியாவினின்றும் ஆரியர்கள் பலவேறு இடங்களுக்கும் பிரிந்து சென்ற பிறகு அவர்களுடைய பழையமொழி பலவேறு பிரிவுகளாகப் பிரிந்து சீரழிந்து செத்துவிட்டதைக் கருதினுல், இந்த உண்மை நன்கு புலப்படும்.

நாட்டிலே அமைதியின்றி அடிக்கடி போர் நிகழ்ந்தால், மொழிவளர்ச்சியோ, கலைவளர்ச்சியோ ஒன்றுமில்லாமல், மக்கள் உள்ளங் கொதிப்படைந்து, நடுக்கமுற்று எதிர்காலம் என்ன செய்யுமோ என ஏங்கியிருப்பர். வறுமை தலைகாட்டும்; வலிமை குறைவுபடும். வேற்று நாட்டான் வந்து சூறையாடுவான்; அவனுடைய ஆட்சி நிலைக்குமானுல், அவனுடைய தாய்நாட்டு மக்கள் நாடோறும் பதினுயிரக்கணக்கில் வந்து குடியேறுவர். அவர்கள் மொழியே ஆட்சிமொழியாகக் கருதப்படும். அந்த மொழியினுல் நாட்டுமொழி புறக்கணிக்கப்பட்டு, வளர்ச்சியடைய வழியிருக்காது. ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் குடியேறிய காலத்தைக் காட்டினும், இக்காலத்தில் இந்நாட்டு மொழிகளில் எழுத்திலும் சொல்லிலும் எண்ணிறந்த ஆங்கிலச் சொற்களும் பிறவும் கலக்கத் தொடங்கிவிட்டமையைக் கண்கூடாகக் காணுகின்ருேம் அல்லமோ? மகம்மதிய அரசர்கள் ஆட்சியில் பலவேறு சொற்கள் அவர்களுடைய மொழியினின்றும் இங்கு குடியேறியிருப்பதையும், அவைகளில் பலவற்றை இன்றைக்கும் பொதுமக்கள் வழங்குவதையும் காணுகின்ருேம். இந்நாட்டு மக்கள் அவர்களுடைய ஆட்சியில் அடங்கி ஒடுங்கி அஞ்சிக்கிடந்தமையை வரலாறுமூலமாக அறிகிருேமன்ருே!

பிறநாட்டோடு நெருங்கிய தொடர்புகொண்டு, அவர்களோடு வாணிபமும் நடத்தினுல், அந்நாட்டினர் இங்கு வரவும் இந்நாட்டினர் அங்கு செல்லவும் நேர்வதோடு, கணக்குப் பதியும்

முறைகளினும், வரிவிதிப்பதிலும், ஒருநாட்டில் இல்லாத பொருள் பிறநாட்டினின்றும் இறக்குமதி செய்யப்படுவதிலும் இருநாட்டினரும் தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளவேண்டியிருத்தலாற் பிறமொழிக் கலப்பு ஏற்படுகின்றது. (எனினும் இம்முறையில் அத்துணை இடையூறு நிகழாது). இக்கால வாணிப முறைகளும், பழந்தமிழ் நாட்டினர் கிரேக்கர் முதலிய பிறநாட்டினரோடு வாணிபம் நடத்திய போழ்து, " மயில், அரிசி, இஞ்சி, கருவேலம்பட்டை " முதலியவற்றைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள் கிரேக்க மொழியிற் கலந்திருப்பதும் பிறவும் இக்கொள்கையை வலியுறுத்தப் போதிய சான்றுகளாகும்.

## இவற்றாலெல்லாம் தமிழ் சீரழிந்ததா ?

மேனாட்டு மொழிகள்தான் மேலே கூறப்பட்ட காரணங்களால் பெரும்பான்மையும் சீர்குலைந்தனவன்றி, அத்துணையளவு தமிழ்மொழி சீர்குலையவில்லை. ஏன்? தமிழ்நாட்டினர் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து நாடோடிகளாய் ஆரியர்களைப் போலத் திரியவில்லை. எந்தவிடத்தில் எவன் அயர்வான்—அவன் பொருளைக் கவரலாம்—நமது வறுமையைக் களையலாம் என்ற எண்ணத்துடன் தமிழர்கள் பதுங்கித் திரியவில்லை. நாட்டில் வற்கடம் (பஞ்சம்) வந்து வாட்டிய காலத்தினும், மழையின்றிக் கோடை மிகுந்து உயிரெல்லாம் மடிந்த காலத்தினும் தமிழ்நாட்டெல்லையைக் கடந்து பிறநாட்டில் சென்று தமிழர்கள் தஞ்சமடையவில்லை. பிறநாட்டாருடன் வாணிபஞ் செய்தும், நெருங்கிப் பழகியும் பொருள் திரட்டினார்கள் தமிழர்கள்-ஆனால், பழங்காலத்தில் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே அறிவுக்கு வேலைகொடுக்காமல் திருடிவைத்துக்கொள்ளவில்லை. வடநாட்டார் பலமுறையும் இந்நாட்டில் வந்து முற்றுகையிட்டும், வெற்றிபெறாமல் ஓடி ஒளியும்படி வெருட்டிவிட்டார்கள். வடக்கே இமயம் வரையிலும் சென்று புலிக்கொடியும், விற்கொடியும் நாட்டித் தங்கள் வெற்றித்தூண்களையும் நிலைநிறுத்தினார்கள். அவற்றை விரிக்கிற் பெருகும்; ஆகவே பிறநாட்டினர் இவர்களை வென்று ஆட்சி செலுத்தவுமில்லை. அக்காரணத்தால் பிறநாட்டுச் சொற்கள் இங்கு தலைகாட்டவுமில்லை.

எனினும், இக்காரணங்களால் ஓரோர்காலத்தில் ஒருசில சொற்களே விரல்விட்டு எண்ணக்கூடியனவாய்ப் பிறநாட்டினின்றும் இங்குத் தலைகாட்டலாயின. ஆனால், மேனாடுகளில்தான்

இடையீடின்றி எக்காலத்திலும் எல்லாவிடத்திலும் பல்வகைப் போர்களும் தலைவிரித்தாடின—நாட்டிலே அமைதி நிலவுவதும் அருமையாயிற்று-எங்கும் புரட்சி-ஏழை மக்கள் எண்ண முடியா மல் வாடி வருந்தினர்—வெற்றியும் தோல்வியும் அடிக்கடி ஏற் பட்டு, ஒரு நாட்டினர் பிறநாட்டில் ஆளுகை செலுத்துவதும், அடாதன செய்வதும் பெருவழக்கமாய் மலிந்துவிட்டது-அதனா லேயே அந்நாட்டு வரலாறு முழுவதும் குருதிக் (இரத்தக்) கறை படிந்துகிடக்கின்றது. மேனாட்டுமொழிகள் மரநூல், மருந்துநூல், மற்றுமுள்ள பலவேறு நூல்களிலும் பயிலுகின்ற பொருளுக்கும், கருத்துக்கும் ஏற்ற புதுச் சொற்களை அவ்வம்மொழிகளில் அவ் வப்போது தோன்றச்செய்யாமல் பிறமொழிச் சொற்களை இரா வல்கொண்டன. இலக்கண வரம்பின்றி, கட்டுப்பாடின்றி மற் றும்பல சொற்களெல்லாம் பெருகிவளர்ந்தன. இவையும் இவைபோன்ற நிகழ்ச்சிகளும் காரணமாக மேனாட்டு மொழிகள் ஒவ்வொன்றும் எத்துணைச் சொற்களைக் கடன்வாங்கி எவ்வெவ் வகையில் மாறுபடலாமோ, எவ்வளவு சிதைந்து வழங்கலாமோ —அவ்வளவும் சிதைந்து உருக்குலைந்து போயின என்றால் அது நாங் கூறுவதில்லை—நாட்டின் வரலாறு கூறுகின்றது.

## வேறு எதனால் அழிந்தது?

இனி, நாடோடும் வழக்கமும், குழப்பமே நிலவுதலும், வறுமையால் அடிக்கடி உழல்வதும், வரம்பில்லாத மொழிகளும் தமிழ்நாட்டில் பிறநாடுகளைப்போல் பெருகிக்கிடக்கவில்லை என் றால், வேறு எதனால்தான் தமிழ்மொழி இப்பொழுது இருக் கின்ற அளவுக்குச் சீரழிந்திருக்க வேண்டும்? என்று நண்பர் கள் கருதலாம். அதற்குக் காரணங்கள் மூன்றே. ஒன்று, பிற நாட்டு மக்களை வரையறையின்றித் தங்கள் நாட்டில் பழந்தமிழர் கள் குடியேற்றினது. இரண்டு, ஆரியர்கள் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திக்கொள்ள, வேண்டுமென்றே செய்த சூழ்ச்சிகளால் தங்களுடைய பிறமொழிச் சொற்களைக் கொண்டுவந்து குவித் தது. மூன்று, பிற்காலத்தவர் புதுக் கொள்கையையும், புதுப் பொருள்களையும் விளக்கப் புதுச் சொற்களை உண்டுபண்ணாமல் அயல் மொழிகளை அப்படியே எடுத்து வழங்கிய அறியாமை என்பன.

## எந்தக் காலத்தில் எவ்வளவு கலந்தது?

பாரதகாலத்திற்கு முன்னர் செய்யப்பட்ட தொல்காப் பியத்தில் சில வடமொழிச் சொற்களும், வடமொழி இலக்கண

மும் காணப்படுவதால் தொல்காப்பியர் காலத்திற்கு வெகுநாள் முன்பாகவே ஆரியர்கள் தமிழ்நாட்டிற் குடியேறிவிட்டனர் என்பது நன்கு புலப்படும். அவர்களை வரையறையின்றிக் குடியேற்றித் தமிழ்மக்கள் உதவிபுரிந்தனர்—நாளடைவில் அவர்களுடைய பழக்கவழக்கங்களும், சொற்களும் பலப்பல இந்நாட்டில் படியத்தொடங்கின. ஆரியர்கள் தங்களுடைய "சாதிப்" பகுப்புகளையெல்லாம், குருட்டு நம்பிக்கைகள் மலிந்துகிடக்கும் தங்கள் மத நம்பிக்கைகளையெல்லாம் இந்நாட்டில் பையப் பையப் புகுத்தலாயினர். என்றைக்குக் குருட்டுக் கொள்கைகளும், கொடிய செயல்களும் நிறைந்த அவர்களுடைய மதங்கள் இங்கு தலையெடுத்தனவோ, அன்றைக்கே தமிழில் ஆரியச் சொற்கள் அடிஎடுத்து வைக்கலாயின. அன்று முதல் இன்றுவரை எழுதப்பட்ட இலக்கியங்களில் வந்துள்ள வட சொற்களை வரிசையாக எடுத்து ஆராய்வோமானல், வரவர ஆரியமதச் சொற்களே தமிழில் பெரும்பகுதியும் பெருகிக்கிடப்பதைக் கண்கூடாகக் காணலாம். மதத்தையும் அதன் கொள்கைகளையும் குறிக்கக்கூடிய ஆரியச் சொற்களையும், பிற சொற்களையும், முதல் முதல் தமிழர்கள் இயன்ற வகையிலெல்லாம் தடுத்தனர்—தனித் தமிழ் நூல்களை எழுதினர்—ஆனல், தமிழர் வகுப்புணர்ச்சியைப் பாராட்டாமையாலும், குடியேறிய குறும்பர்கள் சூழ்ச்சியினலும், தமிழர்கள் மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும், பகுத்தறியும் திறனும் இல்லாமல் ஆரியச் சுழவில் அகப்பட்டுக்கொண்டனர். வடமொழிச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்காமல் வரவர எல்லாச் சொற்களையும் அப்படி யப்படியே வழங்கத் தொடங்கிவிட்டனர். 4, 5-ம் நூற்றுண்டுகளில் தமிழ் வேந்தரும், தமிழ்ப்பெரும் புலவர்களும் மறைந்துவிட்டமையின், ஆரியநாட்டினின்றும் அவர்களுடைய இனக்கூட்டமான பல்லவர்கள், களப்பிரர் முதலான பலரும் இந்நாட்டைச் சூறையாடத் தொடங்கினர். பல்லவர்கள் காலத்தில் வடநாட்டினின்றும் பலவேறு குலத்து ஆரிய மக்களை வரவழைத்துத் [1]தங்களாட்சியைப் புகழும்படியாக-தமிழர் மயங்கி அஞ்சும்படியாகப் பற்பல சட்டதிட்டங்களையும் உண்டுபண்ணினர். அதுமட்டுமா? அரசரே ஒரு தட்டில் நின்றுகொண்டு மற்றொரு தட்டில் சரி எடையாகப் பசும்பொன்னை "மோட்சம், புண்ணியம், தானம்" என்ற பெயர்களால் அள்ளிக்கொடுத்தனர். பொற்கட்டிகளை எங்கிருந்து கொண்டுவந்தார்கள்—வடக்கே

(1) The Pallavas—P. T. Srinivasa Ayengar M. A.

யிருந்து கொண்டுவந்தார்களா? இல்லை! எல்லாந் தமிழனுழைப்பு-எல்லாந் தமிழன் பொருள், இன்னும் அவர்களுக்கு ஏராளமான நிலங்களை இறையிலிகளாகக் (மானியம்) கொடுத்தனர்—பட்டயங்கள் வழங்கினர்; அப் பட்டயங்களெல்லாம், ஆரிய மொழியிலும், ஆரியம் சிதைந்து வழங்கிய பிராகிருத மொழியிலும் எழுதப்பட்டன—வடமொழியில் எழுதிய கல்வெட்டுகளும் மதவெறிகளும் தலைவிரிக்கத் தொடங்கின. அவற்றுள் ஹீரகடகள்ளி, மயிதவோலு என்ற இரண்டு இடங்களில் அகப்பட்ட பட்டயங்கள் மிகப் பழையன, இவைதான் அவர்களால் பிராகிருத மொழியில் முதல் முதல் காஞ்சியினின்றும் எழுதிக் கொடுக்கப்பட்டன. [1] இவர்களுடைய உடைத்தோற்றங்களும், நாகரிகமும், குறுகிய மனப்பான்மையும், கொடுந்தன்மையும் தமிழர்களுக்கு எரிச்சலைக் கிளப்பிவிட்டன—அவர்களைப் பிறநாட்டினராகவே வைத்து, மிலேச்சர்கள் என்று கூறியதோடு "பல்லவர் கயவர் பதகர் நீசர்" என்று பிங்கல நிகண்டில் (ஒரு நூல்) வைவாராயினர். அதன்பின் வடமொழிப் பட்டயங்களும் பிறவும், கோயில்களிலும், விழாக்களிலும் வடமொழி மந்திரங்கள் முதலிய எல்லாம் அவர்களுடைய ஆளுகைபால், அவர்களுடைய நுழைவினால், அவர்தம் கொடிய நோக்கங்களால் தமிழ்நாட்டில் இடம்பெற்றன. மதப் போர்கள் தலைதூக்கின. இதற்கு முன்பாகத் தெலுங்கு நாடும் ஆரியரால் சூறையாடப்பட்டது—அவர் மொழிக் கலப்பால் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே வடுகு என்ற ஒரு மொழி தமிழினின்றும் பிரிந்துவிட்டது. மேலைக் கடற்கரையில் கதம்பர்களும், இராட்டிர கூடர்களும் இடம்பெற்று, வடநாட்டுப் பார்ப்பனர்களை அழைத்து அவர்கள் வேண்டியவற்றை யெல்லாங் கொடுத்துவந்தனர். வந்தவர்கள் திரும்பியும் வடநாடு போகாமல் இங்கேயே தங்குவதற்கு அறிகுறியாகத் தலையில் பின்னால் முடிந்த மயிரை முன்புறமாகத் தொங்கவிடும்படி அவர்களைக் குடியேற்றிய ஆரிய மன்னனும், ஆரியக் குருக்களும் கூறுவாராயினர். தீட்சதர்கள் தலைமயிரை அவ்வாறே இன்னும் முடிந்து கொள்வதைக் கண்கூடாகப் பார்க்கலாம். எட்டாம் நூற்றுண்டில் நம்பூத்திரிப் பார்ப்பனர்கள் ஆரியப் பார்ப்பனர்க்கு அடங்கி நடந்த அரசர்களால் வடநாட்டினின்றும் இறக்குமதி செய்யப்பட்டனர். இவர்களால் தமிழ்மொழிக்கு நேர்ந்த சீர்கேடும்,

---

(1) Studies in Pallava History—Rev. H. Heras [p.p.5.

நாகரிகக் குலைவும் காரணமாக மலையாள மொழியும், கன்னட மொழியும் தோன்றலாயின. ( Tamil Studies—M. Srinivasa Ayengar M. A. )

பழைய கன்னடத்திற்கும் புதிய கன்னடத்திற்கும் பெரும் பிளவுண்டு—புதுக் கன்னடம் பேசுபவனுக்குப் பழக்கன்னடம் புரியாது. கன்னட நாட்டில் வடநாட்டவர் கலந்ததால் உண்டான மாறுபாடுகளை அறிஞர் E. P. Rice என்னும் பெரியார் மிக விளக்கமாக "A History of Kanarese Literature" என்ற நூலில் கூறியுள்ளார். மலையாள மொழியின் பழைய கல்வெட்டுகள் ஏறக்குறைய 800 ஆண்டுகட்கு முற்பட்டதாகக் காணப்படும், அவற்றிற்கும் 16-ம் நூற்றாண்டின் பிற்பட்ட மலையாள மொழிக்கும் ஏராள வேற்றுமையுண்டு. காரணம் வடசொற்கள் அம்மொழியில் அளவுகடந்து பெருகினமைதான் —பழைய வடுகு மாறித் தெலுங்காயிற்று, தெலுங்கிலும் பழந் தெலுச்கு, புதுத் தெலுங்கு என்று இருபிரிவு ஏற்பட்டு ஆந்திரப் பல்கலைக் கழகத்தில் ( Andhra University ) எந்தத் தெலுங்கை எடுத்து நடத்துவது என்று தடுமாறி, பல எதிர்ப்புகளுக்கிடையே இன்று இருமொழிகளும் அங்கு ஒப்புக்கொள்ளப்பட்டே நடந்துவருகின்றன.

தமிழ்மொழிக்கு இந்த அழிவுகள் மாத்திரமல்ல; இன்னும் பலவழியிலும் இன்னல் விளைந்தன. "நாலாயிரப் பிரபந்தம்" என்ற வைணவ நூல் முதலியவற்றிற்கு, 'வடமொழி, தமிழ்' இரண்டையும் 100-க்கு 100 வடசொற்களைக் கலந்து, அவ்வாறு கலந்தால் அது பவளமும், முத்தும்போல அழகுதரும் என்று சொல்லித் தமிழிலே 'மணிப்பிரவாளம்' என்ற ஒரு அருவருப்பான நடையை ஆரியநாட்டுப் பார்ப்பனர்கள் உண்டுபண்ணினர்கள். இவற்றையெல்லாம் விரித்தால் இங்கு இடமில்லை. எதற்காக இவற்றையெல்லாம் கூறுகின்றோமென்றால் ஆரியர் நுழைந்து தமிழ்மொழியின் நிலை எத்துணையளவு மாறுபட்டிருக்கின்றது—அதனால்எத்துணைத் தடுமாற்றங்களும், நாட்டுப் பிரிவுகளும், 'சாதி'ப் பிரிவுகளும் அவற்றால் உள்நாட்டுக்குழப்பங்களும் ஏற்பட்டன—தமிழ்நாட்டுக்கு அதனால் எவ்வளவு வலிமை குறைவுபட்டது. ஆகவே, மொழிக்கலப்பால் நாடும், மொழியும், நாகரிகமும் எவ்வாறு மாறுபட்டு அழிகின்றன என்பதை விளக்குவதற்காகவேயாம். இவற்றை விரிவாக உணரவேண்டுவோர் அவ்வம் மொழிகளின் வரலாற்றையும், நாட்டு வரலாற்றையும் நாகரிகத்தையும் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிற ஆங்கில அறி

ஞர்களுடைய நூல்களையும் (Government Publications and District Manuals) எடுத்துப்பாருங்கள். வேண்டுமானால் ஒரு அறிஞர்கூறுவதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம் :—

"It is clear, therefore, that whenever and wherever any small body of Aryan invaders established themselves as a ruling caste in district populated by Dravidians, while they became merged in the native population, their Sanscritic language would become the language of the district. The Supercession of Dravidian languages by Sanscritic is still proceeding wherever the two came into contact."

(The Dravidian Element in Indian Culture—Slater p. p. 18.)

அவ்வளவையும் படித்துவிட்டு நமது உள்ளத்தைச் சிறிது பழங்காலத்திற்கு ஓட்டிச்செல்வோமானால், ஆ! இந்நாடு அக்காலத்தில் எவ்வளவு பரந்து விரிந்து கிடந்தது, தமிழர்கள் தனியரசு மேலோங்கியிருந்தது—அந்நாட்டினை இழந்தோம்; இனி இருப்பதையும் இழப்பதா? என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனுக்கும் என் ஏற்படாதென்றே கேட்கின்றோம். கடல் நீரால் எண்ணிறந்த நூல்சள் அழிக்கப்பட்டன; கரையான் முதலிய பூச்சிகளால் கணக்கில்லாத நூல்கள் மடிந்தன. சைனரும், ஆரியரும் காமத்தை உண்டாக்குகின்றனவென்று எழுதி எஞ்சிநின்ற நாடக நூல்களை அழித்தனர்—இசை நூல்களையும் அழித்தனர். தமிழ் அரசு ஒடுங்கியது; 14-ம் நூற்றாண்டு தொடங்கியது; பிறநாட்டவர் ஒருவர்பின் ஒருவராகப் படையெடுத்தனர்—நூல்களை யழித்தனர்—தீ வைத்தனர்—சூழ்ச்சியிலே வாழ்ந்தவர் யார் வந்தாலும் அவர்களுக்கு இணங்கிக்கொடுத்து மேலும் தங்கள் ஆட்சியை வலுப்படுததினர்—"புராணங்களும் சாஸ்திரங்களும்" மலிந்தன. கடந்த 600, 700 ஆண்டுகளுள் அளவுகடந்த வடசொற்கள் நுழைந்து கேட்பாரும் தடுப்பாரும் இன்மையினால் இன்றைக்குத் தனித்தமிழ் என்றால், எல்லோர்க்கும் எட்டிக்காயாக இருக்கின்றது. எது தமிழ்ச்சொல், எது வடசொல் என்பதே பொதுமக்கள் அறியமுடியாமல் போய்விட்டது. பெரிய தமிழறிஞனும் தமிழென்றும், ஆரியமென்றும் தடுமாறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்றைக்கு வடசொல்லைக் கலவாமல் எழுதவேண்டுமென்றால், சிறப்பாக இந்நாட்டுப் பார்ப்பனர்கள் சீறிவிழுகிறார்கள். இவர்கள் பழங்காலத்துத் தூய

ஆரியராகக் கருதிக்கொண்டு என்னென்னவோ வாயில்வாரா வசவுகளைச் சொல்லித் தங்கள் சூழ்ச்சிகளை வெளிப்படையாகவே காட்டி அம்மம்ம! எழுதவுந் தொடங்கினர்; சட்டங்களும் செய்தனர். ஆனல், காலஞ்சென்ற திரு. பி. டி. சீனிவாசையங்கார் எம். சீனிவாசையங்கார் முதலிய பார்ப்பன அறிஞர்களே பழங் காலத்துத் தூய ஆரியர்களை இக்காலத்தில் எங்கும் பார்க்கமுடியாது என்று தெளிவாகக் கூறிவிட்டனர்; ஏன்? அவர்கள் நாடோடிகளாய்ப் பலநாடுஞ் சென்று, ஆங்காங்கு வாழ்வாரோடு கூடித் தமக்கெனத் தனி நாகரிகம் இல்லாதுபோய், எல்லாத் தொழிலிலும் கலந்து இன்று பிரித்தறிய முடியாமற் போய்விட்டனர். மற்றும் ஆந்திரம் முதலான நாட்டுப் பார்ப்பனர் அந்நாட்டு மக்களோடு இரண்டறக் கலந்து வகுப்புணர்ச்சியின்றி ஒத்துவாழ்ந்தாலும் இத் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் மாத்திரம் தனியாகப் பிரிந்துகொண்டு தம்மைத் தூய ஆரியர் என எண்ணிக்கொண்டு இன்னல் புரிகின்றனர். தமிழர்களோ நாடோடவுமில்லை-கலக்கவுமில்லை. ஆதலின் அவர்களைப்போல் அத்துணையளவு மாறுபடவுமில்லை. மாறுபட்டவர்களும் பிரிந்துவிட்டனர். இவற்றையெல்லாம் நன்கறியவேண்டுமானல் ஆரியர் நாகரிகமும், மொழியும் பல நாடுகளில் பல்வகையாயிருக்கத் தமிழர் நாகரிகமும் மொழியும் அத்துணையளவு மாறுபடாதிருப்பதுகொண்டே அறிந்துகொள்ளவும். ஆகவே, வடமொழிக் கலப்பினல் தமிழ்நாடு சீர்குலைந்தது; வடவாரியரை "எல்லை கடந்து புகுதவிட்டதால் தமிழழிந்தது; அவர்தம் சொற்களை விலக்காமையால், புதுச் சொற்களைப் படைக்காமையால் சமயம் முதலிய பகுதிகளில் ஏராளமாக ஆரியச்சொற்கள் புகுந்தன— அடக்குவாருமில்லை; அதனலன்றோ இந்நிலையடைந்தோம்" என்று தமிழறிஞர் கருதினர்கள். ஆதலின், இனி அவை போன்று பிறசொற்களைக் கலந்துவிடின், அந்தோ! தமிழ் அழிந்துவிடும். எனவே, இக்காலத்திய ஆங்கிலம் முதலிய பிற மொழிச் சொற்களும் கலவாவல் தமிழைக் காத்தல் தமிழன் கடமை எனத் தெரிந்துகொண்ட தமிழறிஞர்கள் அவ்வாறு செய்யப் பெருமுயற்சி செய்துவருகின்றனர். இந்நிலையில் ஆரியப்பார்ப்பனர் தங்கள் செத்தமொழியைப் புதும்பித்து, எல்லாவற்றையும் தாமே கட்டியாள ஆசைப்படுகின்றனர்—பேராசைப்பேய் பிடரைப்பிடித்துத் தள்ளுவதால் வடமொழியின் போலி உருவமாகிய ஒரு மொழியை—இந்தி மொழியைக் கட்டாயமாகக் கற்கவேண்டுமென்று சொல்லி தமிழன் அல்லும்பகலும் தூக்கமின்றி செந்நீரானது (இரத்தம்) சொட்டச்சொட்

டத் தேடிய பொருளையும், காக்கும் மொழியையும் அழிக்கத் தொடங்குகின்றனர். அவர்களாலேயே வயிறுவளர்த்து அவர்களாலேயே பதவிபெற்று, அவர்களாலேயே தங்களாட்சியை— தங்கள் ஆணவத்தை நிலைநாட்டப் பார்க்கின்றனர்—கறையான் புற்றெடுக்கக் கருநாகங் குடிபுகுந்ததுபோல.

### ஏன் வெருட்டமாட்டார்கள்?

இவ்வாறு பலவழியினும் பிறநாட்டவர் இந்நாட்டினரை ஏமாற்றித் தெலுங்கு, கன்னடம், மலையாளம், என்று சிதறிப் போகும்படித் தமிழ்மொழியைக் குட்டிச்சுவராங்கியும், அவையெல்லாம்போக எஞ்சியுள்ள தமிழ்நாட்டில் அவற்றினும் வேறுபட்ட தமிழ்மொழியை $2\frac{1}{2}$ கோடி மக்களுக்கு மேற்பட்டோர் பேசிவருகின்றனர். இதனையும் கெடுத்துவிட ஆயிரக்கணக்கான வடசொற்களைப் பெரிதும் முயன்று நுழைத்துவிட்டனர். இவ்வளவுங் கெட்ட பிறகுதான் ஐயர்கால்டுவெல், போப், ஆசிரியர் கிரியர்சன், ரைஸ், உவின்ஸ்லோ, பெர்சிவல், டெய்லர், வீரமாமுனிவர், ஸ்லேட்டர் முதலான மேனாட்டுப் பேரறிஞர்கள் இந்நாட்டுத் தமிழைக் கற்கத்தொடங்கினர். அக்காலத்திலும், "தமிழில் ஆரியக்கலப்பினால் சிதைவுகள் ஏற்பட்டன; எனினும் அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு அது தனித்து இயங்கும் ஆற்றலுடையது; அது தேன்போலும் இனியமொழி, கற்பதற்கு எளியது; காலத்தால் வரையறுக்க முடியாத பழைமை உடையது; மொழிகளிலெல்லாம் தலைசிறந்த இலக்கண இலக்கிய வரம்புகளும், வனப்புகளும் பயின்று மிளிர்வது—இறுதியாகக் கூறினால் கற்பாரையெல்லாம் கவரக்கூடியது" என்ற கருத்துப்படப் பலவேறு நூல்களையெல்லாம் எழுதி வெளியிட்டனர்; ஆரிய முதலிய எல்லா மொழிகளுள்ளும் அது உயர்ந்ததென்பதை ஆசிரியர் 'ஸ்லேட்டர்' கூறுவதைமாத்திரம் உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்றோம் :-

"That capacity would naturally be exhibited also in the evolution of language and the purest Dravidian language does exhibit it in the highest degree—in a higher degree than any other Indian languages. ( The Dravidian Element in Indian Culture—Gilbert Slater P. P. 18 )

ஆகவே சீரழிந்த நிலையினும் இத்துணையளவு ஒரு தொடர்பு மற்ற பிறநாட்டறிஞர்கள் இம்மொழியைப் புகழவேண்டுமானால் —இம்மொழி, அத்துணைப் பழைமையும், இனிமையும், அழ

கும், ஆற்றலும் வாய்ந்திருக்குமானல்—அம்மொழி பேசுகின்ற தமிழ் மகன் "ஈதோர் உயர் தனிச் செம்மொழி; அதில் ஆரியர்களே! தலையிடாதீர்" என்று தன்மதிப்புடனே வந்து, ஏன் உலகமறிய உரைக்கமாட்டான்—ஏன் எதிர்ப்போரை வெருட்ட மாட்டான்?

**தமிழ் தமிழனின் செல்வம்:**—இவ்வளவு நெடுங்காலமாய்த் தன்னோடும், தனக்குப் பின்னும் தோன்றிய மொழிகள் இவ்வுலகில் பலப்பல அழிந்தொழிந்தும், தான்மாத்திரம் எத்துணையோ கொடிய ஊழித் துன்பங்களிலெல்லாம் தலைகொடுத்து இன்றைக்கும் ஆரியர்களை அடக்கி அவர்கள் வெட்கித் தலை குனியுமாறு நிமிர்ந்தோங்குமானல்—மேனுட்டறிஞர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுமானல்-அல்வாருன ஒரு இன்பமொழி தமிழ் மொழியானல், அம்மொழி தமிழனுடைய பிறவிச்செல்வமென்று சொல்லாமல் வேறு என்னென்றுதான் சொல்வது எனக் கேட்கின்றோம். ஒருவனுக்கு அறிவைத் தந்து அவன் ஊமைத்தன்மையை நீக்குவது அவனுடைய தாய்மொழிக் கல்வியே. அதனல் அவன் அக் கல்வியைச் செல்வத்தோடு சேர்த்து கல்விச்செல்வம், பொருட்செல்லம் என்று வகுத்து அதனைச் செல்வமாகவே கருதினன்—இப்பொழுதும் கருதுகிறான். ஒவ்வொரு நாட்டு மொழியும் அவ்வந்நாட்டில் பிறந்தவனுக்குச் செல்வமாக இருப்பினும், மக்கள் தோன்றிய அன்றுமுதல் எல்லோரும் பெருமைகொள்ளும்படி இன்றுவரை நின்று நிலவுகிற தமிழ்மொழி தமிழனுக்கு 'அழியாத செல்வம்—தேடிவைத்த செல்வம், என்றுதானே சொல்லவேண்டும். இருக்கின்ற செல்வத்தை எடுத்துத் தகுந்த முறையில் செலவுசெய்து பலரும் பயனடையும்படி செய்யாமல், அவற்றை வீணே எடுத்துப் புதைத்துவிடுதலும், அழித்துவிடுதலும் பொருளாதாரத்தின் அருமை தெரியாத முட்டாள்தனமென்பதில் ஐயமுண்டோ! "ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு" என்பது தமிழ்ப் பழமொழியன்றோ! இவற்றையெல்லாம் அறிந்தும், அறியாதவன் போல் அழித்துவிட்டுப் பிறகு நீர்நிலைகளில் அரிப்பரித்துப் பொருள்தேடினல் அவனுடைய அறியாமைகண்டு சின்னஞ்சிறுவர்களும் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களா? அங்ஙனமாக தமிழனுடைய செல்வமாகிய செந்தமிழ்ச் சொற்களை அழித்து விட்டு அல்லது மறைத்துவிட்டுப் பிறமொழிச் சொற்களை எதற்காக எடுத்துக்கொள்ளவேண்டும்? தனது நாட்டில் செலாவணியிலே இருக்கிற நாணயங்கள் தன்னிடமிருக்க, அதனைக்

கொடுத்துவிட்டுப் புதுக்கோட்டை அம்மன்காசுகளையும், அமெரிக்கநாட்டு டாலர்களையும், பிரான்சு தேயத்தின் பிரான்குகளையும் வைத்துக்கொள்வதால் என்ன நன்மை ஏற்படும். தன் கையை வெட்டிவிட்டுப் போலிக் கை அமைத்தலால் என்ன பயன் ஏற்படும்? பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்துவதால் எத்துணை அருமையான தமிழ்ச் சொற்கள் அந்தோ! அழிந்தொழிகின்றன! எடுத்துக்காட்டாக—நீர், சோறு, குழம்பு, மலர், வேண்டுதல், அறை முதலான தமிழ்ச் சொற்கள் முறையே ஜலம், சாதம், சாம்பார், புஷ்பம், பிரார்த்தனை, ரூம் என்றுதானே வழங்கப்படுகின்றன—அங்ஙனம் கூறுவிடின் இழிவாகக்கூடக் கருதுகின்றார்களே! தப்பித்தவறிப் பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்கினாலும், அவைகளை நன்கு ஆராய்ந்தல்லவோ கொள்ளவேண்டும். ஒருவரிடம் பணத்தைப் பெற்றால் எத்துணைமுறை அதனைத் தட்டிப்பார்க்கின்றோம்? அதுபோல தப்பித்தவறிப் பிறமொழிச் சொற்களைக் கடன்வாங்கினாலும் அவைகளை நன்கு ஆராய்ந்து தங்கள் மொழிக்குத் தகுந்த முறையில் மாற்றியல்லவோ வழங்கவேண்டும். ஆங்கிலேயர்களும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கட்டைமரம் முதலிய தமிழ்ச்சொற்களை 'Tinnevelly, Tuticorin, Catamaran' என்றுதானே வழங்குகின்றனர். இவையெல்லாந்தெரிந்திருந்தும் ஆரியச் சூழ்ச்சியால் தமிழர்கள், அம்மம்ம! அழிந்துவிடுகிறார்களே! பொருட்செல்வத்தைக் காப்பதற்கும், அளப்பதற்கும், அதன் நிலைமை கூறுவதற்கும் 'பொருளாதார அறிவர்' (Financial Advisor) இருப்பதுபோல மொழிநிலையறிந்து அதற்காவன செய்யும் ஆட்சிக் குழுவினர் அரசியலில் இல்லாமையும், எங்கேனும் இரண்டொருவர் இருப்பின் அவர்தம் சோம்பலுமன்றோ இவற்றிற்கெல்லாம் காரணமாகின்றன! எனவே, பழைமையாகச் சூழ்ச்சியால் சிறிதுசிறிதாக விழுங்கப்பட்டுவந்த தமிழை, இன்று வெளிப்படையாகவே அழிக்கக் கருதுவதைக் கண்ட பிறகும் தமிழன் வாளா (சும்மா) இருக்க முடியுமா? ஏன்? அது அவனுடைய செல்வம்!

## மேனாட்டு மொழிகள் எதனால் உயர்ந்தன?

பிறசொற்களை நீக்கித் தனித்தமிழில் எழுதவேண்டுமென்றால், நம் நாட்டில் ஆங்கிலங்கற்ற சிலர், மேனாட்டுமொழிகள் பிறமொழிக்கப்பால் வளரவில்லையா? அவைகளில் ஏராளமான சொற்கள் கலந்திருக்கவில்லையா? எனக் கேட்கின்றனர். மேனாட்டு மக்களுடைய ஆட்சித் திறமையும், அரசியல் நுட்பமும்,

அவற்றின் முறைகளும், வாணிப வளர்ச்சியும், மற்ற நாடுகளில் காணப்படாத-கேட்கப்படாத புதுப்புதுக் காட்சிகளும், கருத்துக்களும் பல்லாயிரக்கணக்காக நாடோறும் அந்நாடுகளில் தோன்றி வளர்கின்றமையாலும், அவற்றைக் கற்றால்தான் அந்த நுட்பங்களை உணரமுடியுமாகையினாலும் அந்த மொழிகளை மற்றைநாட்டு மக்கள் கற்கவேண்டியவாகின்றனர். இப்பொழுதும் கல்லூரி மாணவர்கள் விருப்பப்பாடமாக எடுத்துக்கொள்வதில்: மொழிப்பாடத்தைவிட, வரலாறு, பூதநூல், இயைபுநூல் ( History, Physics, Chemistry etc. ) முதலியவற்றைப் பெரும்பாலோர் எடுத்துக்கொள்வதே இதற்குச் சான்றுபகரும். அன்றியும், உலகம் முழுவதும் எந்த ஆட்சி மிகுதியாய்ப் பரந்து நிற்கின்றதோ அந்த ஆட்சிக் கூட்டத்தினருடைய மொழிதான் எங்கும் மேலோங்கி இருக்கும். உதாரணமாக ஒரு ஜப்பானிய அரசன் இந்தியாவை ஆண்டால் ஜப்பானிய மொழிதான் இந்தியாவில் சிறந்து விளங்கும்; அல்லது ஒரு ஹிட்லர், கானடாவையும், ஆஸ்திரேலியாவையும், தென்னமெரிக்காவையும், இந்தியாவையும், மற்றும் பல பகுதிகளையும் ஒன்றாகவைத்து ஆட்சிபுரிவானானால், ஜெர்மானிய மொழிதான் உலகிலயே தலைசிறந்து நிற்கும். காரணமென்ன? உலகில், பலவேறிடங்களில் இவ்வொரு மொழியே பரவுதலால்-ஆட்சிமொழியாக இருத்தலால், ஆங்காங்குள்ள அறிஞர்களில் பெரும்பாலோர் அந்தமொழிகளில்தான் நூல்களை எழுதுவார்கள். அந்த நாடு பரவிய இடமெல்லாம் அந்த நூற்கள் நன்கு விலையாகும். நாளடைவில் அம்மாதிரி நூல்கள் கணக்கிலவாகிப் பெருகிவிடும். ஆகவே, மேனாட்டு மொழிகளோ அல்லது ஆங்கில மொழியோ வளர்ந்து விட்டன என்றால், அந்நாட்டவர் ஆட்சித்திறமையும், அம்மொழிகளிலுள்ள அறிவு நூல்களுந்தான் அதற்குக் காரணமாதலால், பிறமொழிச் சொற்களின் கலப்பினால் அவை வளர்ந்தன எனக் கூறுவது சிறிதும் பொருந்தாதென்பது வெளியாகின்றதல்லவா? பிறநாட்டாருடைய உதவி (எழுதுவதிலோ, வாங்குவதிலோ) சிறிதும் இல்லாமல், இங்கிலாந்திலேயே அச்சிட்டு இங்கிலாந்திலேயே விற்கப்படுமானால் ஆங்லகிமொழியில் எவ்வளவுதான் பிறமொழிச் சொற்களை எடுத்துத் திணித்துக்கொண்டாலும் அம்மொழி இப்பொழுது இருக்கிற அளவுக்கு அது வளர்ந்துவிடும் அல்லது உயர்ந்துவிடும் என்று யாராவது சொல்ல முடியுமா? பிறநாட்டுடன் தொடர்பு வைத்துக்கொண்டால் அந்தந்த நாட்டுச் சொற்களைக் கலந்துகொள்ளாமல், ஆங்கில மொழிக்குத் தன்னைத் தூய்மையாகப் பாதுகாத்துக்கொள்ளக்

கூடிய ஆற்றலுண்டா? இனிவேண்டாம்—இப்பொழுது இருக்கின்ற ஆங்கிலச் சொற்களுள் கடன்வாங்கிய சொற்களைப் பகிர்ந்துவிட்டு, எஞ்சியிருக்கிற ஆங்கிலச் சொற்களால் ஒருவன் பேசப்புகுந்தால் சாசர் (chaucer) காலத்திற்குச் செல்லுவதன்றி வேறு வழியில்லை. ஆகவே, முயன்றால். உண்மை உழைப்பினால் எந்தக் கருத்தையும் தெளிவாக வெளியிடக்கூடிய தமிழை, ஆங்கிலத்தோடும் மற்ற மொழிகளோடும் ஒப்பிட்டுப் பிறசொற்களை நுழைத்துவிடுவது பெரும் பேதமையாகும். ஆங்கிலம் உலகமொழியாக இருக்கின்றது—ஆதலின் அது பிறசொற்களைக் கலந்துதான் தீரவேண்டும்; அதைப்பார்த்துத் தமிழிலும் அப்படியே கலந்துவிடவேண்டுமென்றால், மொழிபெயர்க்கவோ அதற்காக முயற்சிசெய்யவோ, உழைக்கவோ ஆசைப்படாத சோம்பேறிகள்தான், தமிழை நன்கறியாத வீணர்கள்தான் அங்ஙனம் கூற முற்படுவார்கள்.

## மேனாட்டு மொழிகளின் நிலை.

கடைசியாக மேனாட்டு மொழிகள் பிறமொழிக் கலப்பினால் கண்டபயன், நூற்றுக்கணக்கான சின்னஞ்சிறு மொழிகளாகச் சிதறிப் போய்விட்டமையன்றி வேறொன்றுமில்லை. பழைய செருமனி, மேலைச்செருமனி, கீழைச்செருமனி, நார்த் தாம்ப்பிரியன், ஸெனட், ஸ்காந்திநேவியம், பழங்கால ஆங்கிலம், இடைக்கால ஆங்கிலம். எலிசபெத்தியன் ஆங்கிலம், தற்கால ஆங்கிலம், கிரீக், பெல்ஜியம், ஆஸ்திரியா, ஹங்கேரியா, செர்பியா, போர்ச்சுகீசியம், பிரான்சு, இத்தாலி, நார்வேஜியன், ஸ்காட்டிஷ், ஐரிஷ், டச்சு, ஹாலண்டு, ஸ்பானிஷ், ஹீப்ரூ, பினீஷியம், செக்கோஸ்லோவகியா, யூகோஸ்லோவகியா, ருமேனியா முதலான பழங்கால, இக்கால மொழிகள் அச்சிறிய நிலப்பகுதியில் எல்லையின்றிப் பெருகிவிட்டன. காரணம் முன்னர் கூறியது போல் அயல் மக்கள் வரையறையில்லாமல் கலந்ததும், ஒருவர் மொழிச்சொற்களை ஒருவர் எடுத்துக்கொண்டதும், ஒவ்வொரு மொழிக்கும் கட்டுப்பாடான இலக்கண இலக்கியப் பாதுகாப்புகள் இல்லாது போனமையோடு, அம்மொழிகளெல்லாம் உரப்பியும், கனைத்தும், எடுத்தும் பேசப்படுவதால் ஓசையினிமையின்றி, உச்சரிக்கும் சொற்களும் காலப்போக்கில் சிதைந்தும், வீழ்ந்தும் அழிந்துவந்தமையல்லாமல் வேறொன்றுமில்லை. இவ்வாறு பிறமொழிச் சொற்கள் கலப்பதனால், பலப்பல மொழிகள் உண்டாகி மக்கள் வேறு வேறு கூட்டத்தினராகப் பிரிந்துவிடுகின்றனர். அதனால், நாட்டுப்பிரிவு முதலியவற்றால் மனக்

கசப்புண்டாகிச் சில நூற்றாண்டுகளில் ஒருவர் மற்றொருவருக்கு வேற்றுநாட்டவராகக் காணப்படுகிறார் என்றால், பிறமொழிக் கலப்பின் தீமையை மேலும் விளக்கவேண்டுமோ? இன்றைக்கு ஆந்திர, தமிழ் மாநிலங்களின் பிரிவினைகளும், தெலுங்கர் சென்னையை விழுங்கப்பார்ப்பதும், அதைக்கண்டு தன்னாட்சி மன்றத்தினர் ஆ ஆ! என்று கத்துவதும், தமிழர் அவர்கள் குரல் வளையை நெறிப்பதும் கண்கூடாகத் தெரிகின்றனவன்றோ! ஹிட்லரும், முசோலினியும் ஐரோப்பாவில் இன்று எமனோடு பேரம்பேசுவதைக் காதால் கேட்கின்றோமல்லமோ?

அதுவுமன்றி மொழிகள் ஏராளமாகப் பெருகிவிட்டால், ஒரு மொழியிலுள்ள கருத்தை மற்றொருவன் அறிந்துகொள்ளுதல் அரிதாகிவிடும். பிற்காலத்தில் வருவோர் பலவேறு மொழிகளைப் படிக்கவேண்டிவரும். இன்றைய நிலையில் ஒருவன் 2, 3, மொழிகளைத் தெளிவாகப் படிப்பது எத்துணை வருத்தமாக இருக்கின்றது! 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லோருக்கும் எளிதாகப் புரிந்துவிடுகின்றனவா? நாலாயிரப் பிரபந்தத்தின் உரைகள் எல்லோருக்கும் எளிதாகப் புரிகின்றனவா? கனடாவிலும், தென்னாப்பிரிக்காவிலும், இந்தியாவிலும், ஆஸ்திரியாவிலும், ஸ்காத்லண்டு, இங்கிலாந்து முதலான நாடுகளிலும் உள்ள ஆங்கிலமொழி வேறுவகையாக வரம்பின்றி வழங்கப்படுமானால் அதை ஆங்கிலம் என்ற ஒரே பெயருடன் யாரேனும் புரிந்துகொள்ள முடியுமா? ஆகவே மேனாட்டு மொழிகள் பிறமொழிக் கலப்பினால் சீரழிந்தனவல்லாமல், வளரவில்லையென்பது தெளிவாகின்றதன்றோ! அங்ஙனமாக அழியாது கிடைத்த அரும்பொருளை—தெளிவும், இனிமையும், எளிமையும் உடைய செந்தமிழ் மொழியைச் சீரிய முறையில் பாதுகாப்பது தமிழ்மக்களின் கடமையன்றோ! உரிமையாக, அருமையாகக் கிடைத்த செல்வத்தைப் போற்றாத ஒருவன் தூற்றப்படுவானல்லனோ!

## மொழி சீர்திருந்துமா?

இனி, ஆரிய மதத்தில் அளவுகடந்து நம்பிக்கைகொண்ட தமிழர்களிற் பலர், 'எல்லோரும் ஓர்குலம்' என வாழவேண்டும்; தமிழென்ன? ஆரியமென்ன? இரண்டுமொன்றே! ஆரியத்திலிருந்தே தமிழ் வந்தது! அளவுகடந்த வடசொற்கள் தமிழிலே கலந்துவிட்டன என்று கூறுகின்றனர். அவர்கள்" நமது மதத்திலே ஊழல்கள் நிறைந்துவிட்டன—அவற்றை ஒழிக்க வேண்டும்-எல்லோரும் இறைவனுக்கு ஆட்படவேண்டும்" என்று

அடுத்த அடியிலேயே கூறுகின்றனர். அவர்களுக்கு, "அன்ப நீர்! சங்கராச்சாரியார்களும், நம்மாழ்வார்களும், மத்துவாச்சாரியார்களும், இராமாநுசர்களும், குருநானக்குகளும், மகாவீரர்களும், நாயன்மார்களும் விவேகானந்தரும், பரமஹம்சரும் மற்றுமுள்ளோரும் மதத்தைச் சீர்திருத்துவதற்குச் செய்யாத வேலைகளையோ, முயற்சிகளையோ நீர் செய்துவிடப் போவதில்லை—செய்துவிடவும் முடியாது; ஆனால் சிறிது முயன்றால் தமிழர்கள் ஓரளவு கல்வி அறிவு பெற்றுத் 'தாய்மொழி என்றால் என்ன?' என்பதை அறிந்துவிட்டார்களானால் 10, 15 ஆண்டுகளுள் செந்தமிழ், நலந்திகழ ஓங்கிவளருமென்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில், இதுவரையும் எந்த ஆழ்வாரும் தமிழைக்காப்பதற்காகப் பாம்புக்குடத்தில் கைவிடவில்லை; எந்த நாயன்மாரும் சுண்ணும்பு அறையில் உட்காரவில்லை; கடல்மேல் மிதக்கவில்லை: தவஞ்செய்யவும் இல்லை; சில தமிழர் சிறைசென்றதன் காரணமாக இன்றைய தமிழின்நிலை இனிவரும் சீர்திருத்தத்திற்கு அடிப்படையாக இருக்கின்றது என அறிவிக்கின்றது; எத்துணையோ பகீரத முயற்சிகளாலும் சீர்திருத்த முடியாத மதத்தை நீர் சீர்திருத்தும்போது, தமிழ்மொழி, யார் முயற்சியுமின்றித் தானே சீர்திருந்தும். இதெல்லாம் ஆரியத்தின் கிறுக்குபோலும்!" என்று கூறுவதோடு அமைந்துவிடுகின்றோம்.

## கழுதையா? குதிரையா?

ஆங்கிலமறிந்த சிலரும், ஆரியப் பித்தர்களும் தமிழின் எளிமை, இனிமை முதலியவற்றை உணராமல், தமிழில் எல்லாம் கடபடவென்று இருக்கின்றனவே? ஒன்றும்புரியவில்லையே? இந்தத் தமிழ் எதற்கு என்று கரைகின்றனர். பெருமை பொருந்திய இராமநாதன் M. A., B. L. அவர்களும், டாக்டர் சுப்பராயன் அவர்களும், மற்றும் அவர்களுடைய திருக்கூட்டத்தினர் எல்லோரும் மேற்கூறப்பட்ட ஒன்றும் புரியாத கூட்டத்தைச்சேர்ந்தவர்களே! இந்த இடத்தில் நண்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகின்றேன். குதிரையை வாங்குவதற்கு முன்னால் குதிரையை விற்பவன் தகுதி (யோக்யதை) என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஏன்? அவன் கழுதையை வைத்துக்கொண்டு குதிரை என்று சொல்லி ஏமாற்றிவிடலாம் என்று நினைத்திருந்தால் என்ன செய்வது? ஆனால் வாங்குகின்றவன் அறிவு எங்கு சென்றது எனக் கேட்கலாம். வாங்குவோனுக்குச் சிறிது திறமையிருந்தாலும் கண்டவுடனே அது கழுதை

என்பதைக் கண்டுகொள்ளுவான். தன்னாட்சிமன்றத்தார் (காங்
கரஸ்காரர்) கழுதையை நிறுத்தினாலும், அதற்கு மதிப்புக்
கொடுத்து ஓட்டுப்போடு எனப் பட்டப்பகலில் கேட்கவில்லையா?
விற்பவன் ஏமாற்றிவிடலாமென்ற கருத்தும், ஏமாற்றும் திறமை
யும், அதற்கேற்ற காலமும் பார்த்துத்தானே வருவான்? இருப்
பினும் அதையாவது கண்டுகொள்ளவேண்டுமல்லவா? அதற்
காகவே இவ்வளவுங் கூறினோம். சரி, கழுதையன்று குதிரை
யெனக் கண்டுகொண்டாலும், அது அவனுடைய குதிரையா
அல்லது திருட்டுக் குதிரையா என்பதை அறியவேண்டாமா?
நிற்க, சுப்பராயன் கூட்டத்தினர் தாங்கள் ஆங்கிலக் கல்வியை
எத்துணை நீண்டகாலங் கற்றனர்! எவ்வளவு பொருளைச்
செலவழித்தனர்! மேனாடுகளுக்கும், பிறஇடங்களுக்கும் எத்
துணைமுறை சென்றுவந்திருக்கின்றனர்—இவ்வளவும் செய்த
பிறகுதான் அவர்களுக்கு ஆங்கிலக் கல்வி பெரிதாகத் தோன்றி
யது. ஆனால் தமிழிருந்த மூலையிலும் அடியெடுத்து வைக்காத
அக்கூட்டம்—தமிழே இன்னதென்று தெரியாத அத் தாய்
மொழி ஊமைகள் தமிழில் ஒன்றும் புரியவில்லை என்றால், என்
புரியும்? எவ்வாறு புரியும்? புரிகின்றது என்றாலும் யார் நம்பு
வார்கள் என்றுதான் கேட்கின்றோம். ஆங்கில நாட்டில் பிறந்
தவனாயினும் பள்ளியில் சிறிதும் ஆங்கிலம் படிக்காத ஒருவன்
எனக்கு ஷேக்ஸ்பியர் புரியவில்லை; டென்னிசன் புரியவில்லை,
இதுதான் ஆங்கிலமோ! என்றால் அது அவனுடைய முட்டாள்
தனத்தின் கொடுமுடி என்றுதான் சொல்லவேண்டும்! மேலும்,
அவற்றில் என்ன இருக்கிறது? அந்த நூல்களை ஏன் படிக்க
வேண்டும்? என்றெல்லாம் வரிசையாகச் சொல்வானானால், அவ
னுடைய அறிவைப்பற்றி விரித்தெழுத தமிழ்மொழியிற் சொற்
களில்லை. அது ஒரு பெருங்குறைதான்! இதுபோலவே தமி
ழில் ஒன்றுமறியாத கூட்டம்—தகுதியற்ற கும்பல்—தமிழை
இழித்துப் பேசிவிட்டு "இந்தியைப்படி; அதில் எல்லாம் இருக்
கின்றது" என்றால், இங்குதான் அந்தக் குதிரை விற்பவன்
நினைவு வருகின்றது—இந்தி குதிரைதானா? என்றால் அதைக்
கண்டவுடனேயே எல்லோரும் கழுதை என்று வெருட்டத்
தொடங்கினர்; அந்தக் கழுதையாவது விற்பவனுக்கு உரியதா?
என்றால் அது திருட்டுக் கழுதை; அது வடநாட்டானுக்குரி
யது—விற்பவன் வடநாட்டானுக்கு அடிமை. ஆகவே, தமிழை
அழிப்பதும், இந்தியை வளர்ப்பதுமெல்லாம், பட்டப்பகலி
லேயே கழுதையைக் குதிரை என்று பேசும் கயவர்கள் வேலை
யாதலால், இந்தி ஒரு திருட்டுக் கழுதை என்றும், அதை விற்

பவர்கள் கள்ளர்கள் என்றும், தமிழ்க்காவலர் வந்து நம்மைக் காக்கும்வரையில் ஊர்க்காவலர் (போலீசார்) தலைவராக இருக்கும் பெருமைபொருந்திய ஆச்சாரியார் சொற்படி, அத்திருடர்களைக் கையில்கிடைத்த அல்லது கண்ணில்கண்ட எந்தப் பொருளாலும் "பட்டாபிஷேகம்" செய்துவைக்கலாமென்றும் கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது? திருட்டுக் கழுதை விற்பது மன்றி, நமது அறிவைத் திருடவும் பார்ப்பானானால்—இது முறையல்ல என்றவுடன் "தூக்கில் மாட்டிவிடுவேன் எச்சரிக்கை!" என்று கூறும் 'அஹிம்சாமூர்த்தி' யானால்—தனக்கும் அதன் எதிரொலி கேட்குமென்பதை அக் கயவன் அறியாவிட்டால், அவனுடைய ஏழைமதிக்கு நாம் இரக்கங் காட்டி வந்தவழியிலேயே விரட்டியடிக்க வேண்டுமல்லவா? அப்பொழுது, "கழுதை அவனுக்கு முன்னால்தான் ஓடும்—இல்லை—பின்னால்தான் ஓடும்" என்று இரண்டுபேர் வம்பிழுத்துக்கொண்டு எம்மிடம் வந்தால், அது "ஒட்டம் பிடிப்பவர் திறமையைப் பொறுத்தது" என்றுதான் சொல்லுவோம்.

இச் சூழ்ச்சிகளை அறியாமல், கழுதையைக் குதிரை என நம்பி வாங்கிவிட்டால், அதனால் நரியைக் குதிரையாக்கிய மதுரைத் திருவிளையாடல் நமக்கு நினைவுக்கு வருகின்றது. இவற்றை மேலும் விரிக்க விரும்பவில்லை—என்? படிப்போர் அறிவுக்கும் சிறிது வேலைகொடுக்க வேண்டுமென்றே?

## தமிழில் முடியுமா?

நிற்க, தனித்தமிழ் வேண்டுமென்கிறீர்களே! ஆங்கிலம் முதலிய பிறமொழிகளுள் 'கலைச்சொற்கள்' மலிந்துகிடப்பது போல் தமிழில் இருக்கின்றதா? முயன்றாலும் எல்லாக் கருத்துக்களையும் தமிழில் விளக்க முடியுமா? என்று ஒருசாரார் கருதுகிறார்கள். "**தமிழில் முடியுமா?**" என்ற இதே தலைப்பில் பெருமைபொருந்திய—ஆச்சாரியார் அவர்கள் சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கத்தார் 15—7—38-ல் வெளியிட்ட "கலைச்சொற்கள்" என்ற நூலுக்கு, 16—6—38-ல் ஒரு முன்னுரை கொடுத்திருக்கின்றார். நண்பர்கள் நினைவை அந்த இடத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றோம்:—

"தமிழில் கலைநூல்களனைத்தையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதைச் சிலர் இன்னும் ஒப்புக்கொள்ளுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் பௌதிக சாஸ்திர ஆராய்ச்சிக்கு

வேண்டிய சொற்கள் பழக்கத்தில் இல்லாமையேயொழிய வேறில்லை. எந்தபாஷையும் அதன் வாயிலாகப் பொருளை விளக்க முயன்றாலொழிய, நூல்களுக்குவேண்டிய மொழிகளும், தொடர் மொழிகளும் அதன்கண் அமைவதில்லை. பொருள்களை எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால், மொழிகள் தாமாகவே சமைந்து பொங்கும். இவ்வாறே ஆங்கிலத்தினும், மேனாட்டுப் பிற மொழிகளிலும் கலைச்சொற்கள் உண்டாகி அம் மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்த அகராதி அநேக பண்டிதர்கள் மிகவும் சிரமப்பட்டு ஆழ்ந்த சிந்தனை செலுத்தி ஆய்ந்தெடுத்துத் தொகுத்து, பள்ளிக்கூடங்களில் பௌதிக நூல்களைத் தமிழில் போதிக்கவும், புதிய புத்தகங்கள் எழுதவும் பண்படும் வழியில் ஆக்கப்பட்டதாகும். இதை ஒரு முதற்படியாகவே கருதி அனைவரும் அன்புடன் ஆதரிக்கவேண்டுமோகக் கோருகிறேன்."

சென்னை,<br>16—6—38, } (ஒ-ம்.) ச. இராசகோபாலாச்சாரி.

இவ்வாறு தமிழில் எல்லாவற்றையும் எழுதமுடியும் என்று கூறியதோடு, அதே கலைநூலில் பூதநூல் (Physics) என்ற பகுதியில் 500-க்கு மேற்பட்ட கலைச்சொற்களை ஆங்கில மொழிக்கு நேராகத் தமிழில் எழுதியிருக்கிறார். அச் சொற்களைப் பயன்படுத்தித் "தமிழில் முடியுமா" என்ற தலைப்பில் வேறு ஒரு பூதநூலையும் வெளியிட்டிருக்கின்றார். இப்பொழுது தமிழின் எதிரியாக நடந்துகொள்ளும் ஆச்சாரியாரே அங்ஙனம் கூறுவதோடு செய்துங்காட்டுவதென்றால் இதைப்பற்றி நாம் ஒன்றும் மிகுதியாகக் கூற விரும்பமில்லை. ஆனால், இதற்கு மாறாக:— "தமிழில் முடியுமா?" என்ற தலைப்பிலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு பார்ப்பனப் 'பூதநூல்' ஆசிரியர் 3 திங்கள் முன்பாகப் பேசினார்; அவர் பேச்சுமேடையில் அங்குமிங்கும் உலவிக்கொண்டே பேசினார்—கரும்பலகையில் சில கலைநூற் சொற்களை எழுதினார்—அவற்றின் மொழிபெயர்ப்பாகத் தமிழ்ச்சொற்கள் என்ற பேரால் வடமொழி, தமிழ் இரண்டையுங் கலந்த சில சொற்களை எழுதிவிட்டு "இச்சொற்களில் ஆங்கிலம்போலப் பொருள் நிறையவில்லை—ஆரியத்தின் உதவியும் வேண்டியிருக்கிறது—ஆதலால், ஆங்கிலச் சொற்களையே எடுத்துக்கொள்ளலாம்—எனவே தமிழில் முடியாது" என்று பேசி முடித்தார். அப் பார்ப்பனர் சொன்ன சொற்களைக்கேட்ட மாணவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். சிரிப்பு வருவதற்கு

4 காரணங்களைத் தொல்காப்பியர் கூறியிருக்கின்றார். அவற்றுள் பிறர் அறியாமையைக் கண்டபொழுதும், தன்னுடைய அறியாமையாலும் சிரிப்பு வருவதுண்டு என்பது ஒரு காரணம். அதற்கு உரையெழுதிய பேராசிரியர், "கூனர், குறளர் நடையும், பார்ப்பார் பேசுந் தமிழும்...." சிரிப்பை உண்டுபண்ணும் என்று எழுதியிருக்கிறாரே! இங்குசிரித்தவர்கள் பேசியவருடைய அறியாமைகண்டு சிரித்தார்களா? அல்லது தங்கள் பேதைமையால்சிரித்தார்களா? இல்லையென்றால், அப் பார்ப்பனர் பேசிய தமிழுக்காகத்தான் சிரித்தார்களா? எதற்காகச் சிரித்தார்கள்? என்று பலப்பல நினைத்தேன். கடைசியாக எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான் சிரித்திருக்க வேண்டும் என்று எண்ணிய பொழுது என் உள்ளத்தில் கொள்ளைச் சிரிப்பு வந்தது" என்பதாக அங்கு சென்றுவந்த ஒரு தமிழன்பர் கூறினார். இனி ஐயருடைய முடிவுக்கு ஆச்சாரியார் என்ன சொல்லப்போகிறாரோ தெரியவில்லை.

### அது நிலைத்து நிற்காது.

தமிழை இவ்வளவும் போற்றிய ஆச்சாரியார் இந்தியினால் அதனைக் கெடுக்க எண்ணுவாரா? ஏன் அவரை எதிர்க்கவேண்டும்? என்று அவருடைய திருக்கூட்டம் நம்மைக் கேட்கலாம். தமிழை ஆச்சாரியாராகட்டும், அல்லது ஒரு ஆங்கிலேயனாகட்டும், வேறு யாரானாலும், ஆங்கிலம், தமிழ் இரண்டையும் நன்கு கற்பார்களானால் தமிழ் எந்த உதவியையும் நாடாமல் தனியே நின்று விளங்கக்கூடிய இனிய மொழி—எளிய மொழி" என்பதை உளமார உணர்வார்கள். ஆனால் வெளியில்வரும் கருத்துக்கள் உண்மையானதாகவோ, வேறு எவ்வகையாகவோ இருக்கலாம். எப்படியிருப்பினும் அவர்களுடைய உள்ளம் தமிழைச் சிறந்த மொழியாகவே கருதியிருக்கும். சில ஆரியக் கிறுக்கர்கள் தமிழைத் தெள்ளத் தெளியக் கற்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் எண்ணிறந்த வடசொற்கள் கலந்திருக்கும். காரணமென்ன? தனித்தமிழ் எழுதவோ, பேசவோ முடியாமல் இல்லை; வேண்டுமென்றே செய்கிற குறும்புக்கு என்ன செய்யமுடியும். ஆகவே, தனித்தமிழில் எல்லாம் இனிது முடியும் என்று கூறிய ஆச்சாரியார் கூற்றில் புதுமையும் இல்லை—வியப்புமில்லை. ஏனெனில் பல ஆண்டுகட்கு முன்பே ஐயர் கால்டுவெல் என்பார் இதை நன்கு விளக்கிவிட்டார். ஆதலின், மாட்டேன் என்றாலும் ஆச்சாரியார் ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும். ஆனால் இதனை ஆச்சாரியார் ஒப்புக்கொண்டது 'சரணாகதி'யடைவதற்கும்—மந்திரிபதவி ஏற்பதற்கும்

—இந்தியின்மேல் காதல்கொள்ளுவதற்கும் முற்பட்ட நாளில் தான். அத்துணைச் சிறப்புடைய தமிழை அழிக்கத்தான் இந்தி புகுந்ததும். தமிழ்வளர்ச்சிக்குப் பொருள் தருதலும், புகழ்தலும் ஆகிய எல்லாம் கடிக்கவரும் நாய்க்கு எலும்புபோடுவதையே ஒக்கும். அன்றியும் பகைவன் ஒருவன் நம்மைப் புகழ்ந்தால் அதில் ஏதோ சூழ்ச்சியிருக்குமல்லவா? இவையெல்லாவற்றை யும் கருதினால் பார்ப்பனர் புகழும், பொருளும் நன்மைதந்தாலும் நமக்கு வேண்டாம்-அது நிலைத்து நிற்காது என்பதை நெஞ்சிற் பதிக்கவேண்டும்.

### சொல்லாக்கம்.

இனி, தனித்தமிழ் வேண்டுமென்கிறீர்களே! இந்த ஆங்கிலச் சொல்லிற்குத் தனித்தமிழ்ச்சொல் ஒன்று சொல்லுங்கள் பார்ப்போம்! என்று சிலர் திடீரென்று மிரட்டுவதுண்டு. எப்பொதும் எந்த உலகிலும் ஒரு பொருள் உண்டான பிறகோ, அல்லது உண்டாவதற்குச் சிறிது முன்பாகவோதான் அதற்குப் பெயர் ஏற்படும். பொருள் உண்டாவதற்கு நெடுநாள் முன்பாகவே அதற்குப் பெயர் உண்டுபண்ணிவிட முடியாது. புகைவண்டி உண்டாவதற்கு முன்பு புகைவண்டியைக் குறிக்கக்கூடிய சொல் உண்டாகவில்லை. வெடிகுண்டு உண்டாவதற்கு முன்பே, 'டம், டம் புல்லெட்' முதலிய பெயர்கள் உண்டாகவில்லை. அது போல, பிறநாட்டுப் பொருள்களும். கருத்துக்களும் தமிழ்நாட்டில் வந்த பிறகுதான் அவற்றிற்குப் பெயர் ஏற்படுத்த முடியும். இத்துணை நாளாக எண்ணிலாத பொருள்கள் பிறநாட்டினின்றும் இங்குவந்திருந்தாலும் அவற்றிற்கெல்லாம் தக்க பெயர்ச் சொற்களைத் தமிழில் ஏற்படுத்தாமல் தமிழில் அது இல்லை, இது இல்லை, அதுமுடியவில்லை என்றால், தமிழர் குறையல்லாமல், மொழியின் குறையல்ல—தங்களுடைய சோம்பேறித் தன்மையையும், மூடத்தன்மையையும் ஒப்புக்கொள்ளாமல் மொழியைக் குறைசொல்வது பெருந்தவறாகும். தமிழே தெரியாதவர் இங்ஙனம் கூறினால், அது வடிகட்டின முட்டாள்தனமல்லாமல் வேறில்லை. பிறமொழிச் சொல்லுக்குத் தமிழ்ச்சொற்களையும் புதிதாய் உண்டுபண்ண வேண்டும்; அதற்கென்றே பாடுபட வேண்டும்—அதில் பொருளாழம் இருக்கவேண்டும்; சுருக்கமாக இருக்கவேண்டும். இவ்வளவும் அமையும்படியாகச் செய்ய முயன்றால் அதில் சில குறைகள் இருக்கவும் செய்யும். இவை எல்லா மொழிக்கும் இயற்கை. ஆயினும் தமிழில் கூடியமட்டில் கூறிவிட முடியும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து ஒவ்வொரு சொல்லையும் ஆக்கி, அவற்றை அறிஞர் ஒப்புக்கொள்ளவும் வழங்கவும் செய்தல்வேண்டும். ஆதலின், திடீரென்று சொல்லமுடி

யுமா? முடியாதா என்று கேட்பதும், அவர் விழிப்பதும், உடனே பார்த்தாயா தமிழின் அழகை! என்று இகழ்வதும் அறியாமை என்பதில் ஐயமுண்டோ?

இவ்வளவும் இடர்ப்பட்டு முடித்துவிட்டால், "அந்தச் சொற்கள் எல்லாம் கடினமாய் வாயில் நுழையமாட்டேன் என்கின்றன. நினைவிலிருக்கமாட்டேன் என்கின்றன. பிறரிடம் சொன்னால் அவருக்குப் புரியவில்லை—ஏளனம் செய்கிறார்களே! என் செய்வது" என்று சில தமிழர்கள் கேட்கின்றனர். இதற்கெல்லாம் அவர்கள் சிறிதும் தமிழறியாமல் இளமைமுதல் பிறமொழியையே படித்ததுதான் காரணமல்லாமல் வேறில்லை. ஆனால், புனருத்தாரணம், யதாஸ்து, பிரேரேபணை, துராக்கிரகம், பினாமி, ஸ்டேட்மென்ட், பட்ஜட், டாரிப் போர்டு, பிளாக், கேங்க் முதலான எண்ணில்லாத வடமொழிச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் 'தமிழ்' என்ற பேரால்—எளியநடை என்ற பேரால்—பொதுமக்களுக்குப் புரியவேண்டும் என்று சொல்லப்பட்டு இன்றைக்கும் பலவேறு தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. இவற்றைப்பற்றிக் கேட்பாரில்லை. இவையெல்லாம் நாளடைவில்தானே பொதுமக்கள் புரிந் கொண்டார்கள்—பல சொற்கள் வாயில் நுழையாவிட்டாலு தப்புந்தவறுமாகப் பேசிப் பழகத் தொடங்குகிறார்களே! த மைக்காட்டினும் ஆங்கிலம் முதலான மொழிகளில் 'சம டியை'ப்பற்றிய பேச்சுவந்து இரண்டொரு ஆண்டுகளாயினு இன்னும் அதன் பொருளும், திட்டமும் பலருக்குந் தெரியாதே இதை நாளடைவில்தானே அவர்கள் புரிந்துகொள்ளப் போகின் றனர். இன்றைக்கிருப்பவர்கள்தான் எப்பொழுதும் இருக்க போகிறார்களா? நாளைக்கு வருபவராவது அறிந்து முதலிலே திருந்தட்டுமே! அதற்காகவாவது இப்பொழுதே சமஷ்டி என் பதைக் 'கூட்டாட்சி' என்று திருத்தலாமல்லமோ? தமிழை காட்டிலும் ஆங்கிலம் முதலான மொழிகளில்தானே ஒலித்த றுன்பங் (உச்சரிப்புக்கஷ்டங்) கள் உண்டாகின்றன! அவற்றை யெல்லாம் எவ்வளவோ வருந்திக் கற்றுவிடுகிறார்கள். ஆனா தமிழில் இரண்டொன்றைச் சொல்லிமுடிப்பதற்குள் என் சீறி விழவேண்டும்? இவையெல்லாம் ஆராயாமை, சோம்பல் முத லியவற்றால் வரும் அறியாமைதானே!

தினமணி. சுதேசமித்திரன், அநுமான், ஆனந்தவிகடன் முதலான பார்ப்பனர்களும், பார்ப்பனக் கூலிகளும் நடத்துகிற செய்தித்தாள்களில் நாடோறும் ஏராளமான ஆரியச் சொற்க ளும், ஆங்கிலச் சொற்களும், பார்ப்பனீய நடையும் அளவு கடந்து பெருகிவருவதையும், அவை எல்லாம் எளியநடை என்

னும்பேரால், அவற்றைப் பின்பற்றிப் பல வயிற்றுப்பிழைப்புக் கூலிகளும், சுரண்டுங் கூட்டமும் தமிழைச் சீர்குலைக்கின்றன. இவற்றைத் திரு. காசிவிசுவநாதன் செட்டியார் முதலியோர் பல கூட்டங்களில் நன்கெடுத்து விளக்கிப் பேசியிருக்கின்றனர். "சுதேசமித்திரன் என்று தமிழ்நாட்டில் நடைபெறத் தொடங்கியதோ, அன்றே தமிழ் அழியத் தொடங்கியது" எனப் பெரியார் ஈ. வெ. ரா., தலைவர் கி. ஆ. பே. விசுவநாதம் முதலிய அறிஞர்கள் பலமுறையும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். தமிழனுக்கு எதிரான பத்திரிகைகள் அரசியல், பொருளியல், மக்களியல் முதலான எல்லாப் பகுதியினும் வரும் ஆங்கிலச் சொற்களுக்குத் 'தமிழ்' என்ற பெயரால் ஆரியச்சொல்லை இட்டு வழங்குகின்றன. நல்ல தமிழில் செய்திகள் அனுப்பினாலும் அவற்றை ஆரியமாகத் திருத்தி வெளியிடுகின்றன. இந்நிலை வளருமானால் எதிர்காலத்தில் மொழியில் வேண்டாத—பொல்லாத ஒரு மாறுதல் ஏற்பட்டு ஆரியர்களால் தமிழ்மொழி அழிந்தொழிவது திண்ணம். இப்பொழுதும் மொழிகாரணமாகவே கிளர்ச்சி நடைபெறுகிறது—"இந்தியினால், வடநாட்டு ஆரியக் குடியினர் இங்கு குடியேறி, தமிழ்மொழி, நாகரிகம், கலை எல்லாவற்றையும் அழிக்கத் தொடங்குவர்" என்ற காரணத்தை அடிப்படையாக இக்காலத்தில் எல்லாவிடங்களிலும் தமிழ்த் தலைவர்கள் கூறியும் எழுதியும் வருகின்றனர். பேசுவது மாத்திரம் போதாது; எழுதுவதும் போதாது. தமிழ்த்தலைவர்களால் நடத்தப்படுகிற நமதியக்கத்து விடுதலை, குடியரசு, பகுத்தறிவு முதலான தாள்களிலும் ஒரு வாரத்திற்கு இத்துணைச் சொற்கள் 'திருத்தப்பட்டன' என்று ஒரு கணக்கை வைத்துக்கொண்டு, சிறிது சிறிதாக வாரத்திற்கு 10 சொற்கள் வீழ்க்காடு திருத்திவந்தால், மிக விரைவில் அனைவரும் புரிந்துகொள்வர். இரண்டங்குல இடத்தை ஒதுக்கிவைத்து, அதில் இன்னின்ன சொற்கள் திருத்தப்பட்டன என்றறிவித்தல்வேண்டும். அதற்காக ஒரு அறிஞர் கூட்டத்தை ஏற்படுத்துமாறு சென்னை மாநிலத் தமிழ்மாநாட்டினரைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். நீண்ட செய்திகள் வந்தால் ஆசிரியர் அதனைச் சுருக்கி வெளியிடுதல்போலப் பிறசொற்களைத் தெரியாமல் கலந்து செய்தியனுப்புவார்களானால், அவற்றையெல்லாம் தமிழ்நடையில் திருத்தி வெளியிட ஆசிரியர் முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். இல்லையேல் மற்றவர்களைக் குறைகூறுவதில் பயனின்றி நம்மையே நாம் வைதவர்களாவோம். ஆதலின், அறிஞர்கள் இதனை உளங்கொண்டு கருணையுடன், அதற்கேற்ற ஒரு வழியைத்தேட வேண்டுகின்றோம்.

நிற்க: தமிழனுடைய மொழியானது பண்டுதொட்டு சூறையாடப்பட்டது—பலமொழிகளாகப் பிரிக்கப்பட்டது—எஞ்சியிருப்பதையும் அழிக்க நினைக்கும் ஆரியக்கூட்டம் ஒருமொழியால் ஒரு மொழி கெடாதென்று பலப்பல காரணங்களைக்காட்டத் தொடங்கிற்று; அக் காரணங்களையெல்லாம் வெட்டிப் பேசியே தமிழ்மொழி பிறமொழிக் கலப்பால் உறுதியாய்க் கெட்டுவிடும். அந்தோ! தமிழ்க்கொலை! என்று எடுத்துக் கூறினோம். அன்றியும் தலைவர்கள் மற்றும்பல அரும்பொருள்களை எடுத்து நெறியான முறைகளில் விளக்கிக்காட்டியும் ஆரியர் கொடுமை இந்நாட்டில் ஓய்ந்தபாடில்லை. தலைவர்களையும் தொண்டர்களையும் இன்று கொடுங்கோன்மையால் சிறைசெய்தனர்; அடக்குமுறை அதனுடைய எல்லையைப்போய் எட்டிப்பார்த்து விட்டது. மக்கள் உள்ளம்வெதும்பியது. ஆடவர் பெண்டிர் அனைவரும் இன்று சிறைசெல்லத்தொடங்கிவிட்டனர். தமிழ்க்குழவிகளெல்லாம் இன்று சிறைப்பாலைக் குடித்து வளருகின்றன. இன்றைக்குள்ள இம் மாபெரும் உணர்ச்சி எதனால் தோன்றியது? வரிக்கொடுமையாலல்ல; சோற்றுக்கில்லாமையாலல்ல; வேறு எக்காரணத்தாலுமல்ல. வேறு காரணங்களால் கிளர்ச்சி நடந்த காலத்திலெல்லாம் இம் மாபெரும் உணர்ச்சி உண்டாகவில்லை. இப்பொழுது சைவன், வைணவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், தன்னாட்சியாளன், நீதிக்கட்சியினன் என்ற வேற்றுமைகளை எல்லாம் அகற்றித் தமிழர்களுக்குள் ஒரு ஒற்றுமையும், புத்துணர்ச்சியும், மகளிர், மகவுவரை பரவி ஆரியர் சூழ்ச்சி இன்று ஒவ்வொருநாளும் அசைக்கப்படுகிறதென்றால், இதற்குக் காரணம் 'தமிழ்மொழி' ஒன்றுதான். அம்மொழியினைக்காத்தற்கு முன்வந்த வீரத் தமிழர்கள் இன்று ஆரியர்களுக்கு இரையாகின்றனர்—காட்டிக்கொடுப்பவர்கள் இதனை இமைகொட்டாமல் நின்று பார்க்கின்றனர்—இதுவரையும் தமிழர் பொருளையும் தமிழர் மொழியையும் உண்டுகொழுத்த ஆரியர், இன்று தமிழ் மக்களையே பட்டப்பகலில் ஒடுக்கிவிடப் பார்த்தால், உண்மைத் தமிழன் எவன் பொறுப்பான்? எவ்வாறு பொறுப்பான்? என் பொறுப்பான் என்றே கேட்கின்றோம்; அவனுடைய உள்ளங் கொதித்தது—தனதுரிமையை எண்ணினான்—பெருமையைக் கருதினான், வெகுண்டான்—எழுந்தான்; உடன்பிறந்தாரனைவருக்கும் உண்மையை எடுத்து விளக்கினான்—அனைவர் உணர்ச்சியும் காட்டுத் தீபோல் பரவியது. எல்லோருங் கூடினர், எல்லோரும் உறுமினர், அவ் உறுமல் கடற்கரையில் சென்று எதிரொலி புரிந்தது—"**தமிழ்நாடு தமிழருக்கே**" என்று.

வாழ்க அவர் கொற்றம்! (தொடரும்.)

வெளிவரும் ! விரைவில் வெளிவரும் !!

# தமிழ்நாடு தமிழருக்கே - இரண்டாம் பகுதி

குறிப்பு :—இரண்டாம் வெளியீட்டில், தமிழில் பிறமொழிக் கலப்பை எவ்வெவ் வழிகளில் தடுக்கலாமென்றும், தமிழ்மொழியை எவ்வாறு வளர்ப்பதென்றும், வடநாட்டு மார்வாடிகளும், பார்சிகளும், பனியாக்களும் இந்நாட்டில் எந்த அளவில் எவ்வாறு பரவினரென்றும், அவர்கள் எவ்வாறு தமிழர் பொருளைக் கொள்ளையடிக்கிறார்கள் என்றும், தமிழ்நாடு தமிழருக்கு எவ்வாறு உரியது என்றும் புள்ளி விளக்கமாக, வரலாறு மூலமாகச் சான்றுகாட்டி அழகிய முறையில் தலைவர் உருவப் படங்களுடன் வெளியிடப்படும்.

இவ்வெளியீடு கிடைக்குமிடம் :—

வித்துவான் அன்பு கணபதி,
11, ரிலையன்ஸ் ரைஸ்மில்தெரு, கொண்டித்தோப்பு,
ஜி. டி. சென்னை.

செயலாளர்,

தமிழர் கழகம், ஐயம்பேட்டை, தஞ்சை.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆசாணுற்றுப்படை | 0 | 1 | 0 |
| 2. | உபந்நியாசங்கள் | 0 | 4 | 0 |
| 3. | கல்விப் பயிற்சிக்குரியது தாய்மொழி | 0 | 1 | 0 |
| 4. | வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி | 0 | 3 | 0 |
| 5. | நக்கீரர் | 0 | 8 | 0 |
| 6. | கபிலர் | 1 | 6 | 0 |
| 7. | அஜ்ஞானத்தின் வழக்கீடு | 0 | 10 | 0 |
| 8. | தொல்-சொல்-தெய்வச்சிலையார் உரை | 2 | 0 | 0 |
| 9. | நால்வர் நான்மணி மாலை | 0 | 1 | 0 |
| 10. | சிலப்பதிகாரம் புகார்காண்டம் மூலமும் குறிப்பும் | 0 | 5 | 0 |
| 11. | நெல்லை வருக்கக் கோவை | 0 | 2 | 6 |
| 12. | சித்திரகந்தாதி உரையுடன் | 0 | 1 | 6 |
| 13. | கரந்தைக்கட்டுரை (வெள்ளிவிழாவெளியீடு) | 3 | 0 | 0 |

## தமிழ்ப் பாதுகாப்புக் கழக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| கபிலரகவல் குறிப்புரை | 0 | 0 | 3 |
| ஆபுத்திரனகவல் குறிப்புரை | 0 | 0 | 3 |
| அழைப்பிதழ் எழுதுமுறை | 0 | 1 | 0 |
| வடசொல் தமிழ் அகரவரிசை | 0 | 1 | 0 |
| தமிழ்ச் சொற்களைப் பிழை நீக்கி எழுதுமுறை | 0 | 1 | 0 |
| மக்கட் பெயர் அகரவரிசை | 0 | 1 | 0 |

6 நூல்களையும் 5 அணு தபாற்றலை அனுப்பிப் பெறலாம்

கிடைக்குமிடம்:—

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்,
137, பவளக்காரத்தெரு, சென்னை.

## குடியரசுப் பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| லெனினும் மதமும் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| கடவுளும் பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர் யார்? | 0 | 2 | 0 |
| இராமயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| ,, அயோத்தியாகாண்டம் | 0 | 8 | 0 |
| ,, ஆரண்யகாண்டம் | 0 | 4 | 0 |
| ,, கிட்கிந்தாகாண்டம் | 0 | 4 | 0 |
| சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| சமதர்ம உபந்நியாசம் | 0 | 0 | 6 |
| ஈ. வெ. ரா. இலங்கை உபன்யாசம் | 0 | 0 | 6 |
| பர்னுட்ஷா உபந்நியாசம் | 0 | 1 | 0 |
| போல்ஷ்விக்முறை | 0 | 1 | 0 |
| மறுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| ஞானசூரியன் | 0 | 5 | 0 |
| தர்ம பரீக்ஷை | 0 | 3 | 0 |
| விவாக விடுதலை | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:— குடியரசுப் பதிப்பகம், ஈரோடு.